# கோமாதா

## கருத்துக் களஞ்சியம்



சைவப்புலவர் சு. செல்லத்துரை

உ
சிவமயம்

# கோமாதா

## கருத்துக் களஞ்சியம்

இளவாலை
*கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை*

அன்னை
சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை
நினைவு வெளியீடு
2005-02-25

| | | |
|---|---|---|
| நூல் | - | *கோமாதா* |
| ஆசிரியர் | - | *கலாபூஷணம்,* |
| | | *சைவப்புலவர் சு. செல்லத்துரை* |
| உரிமை | - | *ஆசிரியருக்கு* |
| முதற்பதிப்பு | - | *1999-04-03 - 750 பிரதிகள்* |
| இரண்டாம் பதிப்பு | - | *2001-03-11 - 500 பிரதிகள்* |
| மூன்றாம் பதிப்பு | - | *2005-02-25 - 1000 பிரதிகள்* |
| எழுத்தமைப்பு | - | *செ. மாவிரதன்* |
| அச்சுப் பதிப்பு | - | *அம்மா அச்சகம், இணுவில்.* |
| விலை | - | *ரூபா 100.00* |

| | | |
|---|---|---|
| Title | - | *Komatha* |
| Author | - | *Kalapooshanam,* |
| | | *Saivapulavar S. Sellathurai.* |
| Copy Right | - | *Author* |
| First Edition | - | *1999-04-03 - 750 Copies* |
| Second Edition | - | *2001-03-11 - 500 Copies* |
| Third Edition | - | *2005-02-25 - 1000 Copies* |
| Type Setting | - | *S. Mavirathan* |
| Printers | - | *Amma Press, Inuvil.* |
| Price | - | *Rs. 100.00* |

உ


சிவமயம்



## சமர்ப்பணம்

பிஞ்சு வயதில் எந்தை
பெருமான் கழல்சேர
அஞ்சாதீர் என்றெம்மை
அணைத்தே தனை ஒறுத்துப்
பசுவளர்த்துப் பயிர்வளர்த்துப்
பக்குவமாய் எமைவளர்த்துக்
கல்வி அறிவொழுக்கம்
கடமையுணர்வூட்டி
மானம் பெரிதென்னும்
மந்திரத்தை நன்குணர்த்திச்
சந்தனமாய்த் தான் தேய்ந்து
சந்ததம் எம்புகழ் மணக்க
வறுமையிலும் செம்மையாய்
வாழவைத்த எம் அன்னை
பாதமலர்களில் இப்
பசுமலரைச் சூட்டுகின்றோம்.

மகன் சு.செல்லத்துரை



உ
சிவமயம்

# கோமாதாவில் கொலுவிருக்கும் தெய்வங்கள்

| | | |
|---|---|---|
| கொம்பின் அடியில் | - | பிரமவிட்டுணுக்கள் |
| கொம்பின் நுனியில் | - | கோதாவரி முதலிய |
| | - | தீர்த்தங்களும் |
| | - | சராசரங்களும் |
| சிரத்தில் | - | சிவன் |
| நடுநெற்றியில் | - | உமாதேவி |
| மேல்நாசியில் | - | முருகக்கடவுள் |
| உள்நாசியில் | - | நாகேசர் |
| இரு காதுகளிலும் | - | அச்சுவினி தேவர் |
| இரு கண்களிலும் | - | சூரிய சந்திரர் |
| பல்லில் | - | வாயு |
| நாவில் | - | வருணன் |
| ஊங்காரத்தில் | - | சரஸ்வதி |
| இருதயத்தில் | - | இயமன் |
| கெண்டைத்தலத்தில் | - | இயக்கர் |
| உதட்டில் | - | உதயஅஸ்தமன சந்திகள் |
| கழுத்தில் | - | இந்திரன் |
| திமிலில் | - | அருக்கர்கள் |
| மார்பில் | - | சாத்தியர் |
| நான்கு கால்களிலும் | - | அனிலவாயுக்கள் |
| முழந்தாள்களில் | - | மருத்துவர் |
| குரத்தின் நுனியில் | - | நாகலோகத்தார் |
| குரத்தின் நடுவில் | - | கந்தருவர் |
| மேற்குரத்தில் | - | தேவமாதர்கள் |
| முதுகில் | - | உருத்திரர் |
| சந்திகளில் | - | வசுக்கள் |
| அரைப்பலகையில் | - | பிதிரர்கள் |
| பகத்தில் | - | சத்தமாதர்கள் |
| அபானத்தில் | - | இலக்குமி |
| அடிவாலில் | - | நாகேசர் |
| வால் மயிரில் | - | சூரியன் ஒளி |
| மூத்திரத்தில் | - | கங்கை |
| சாணத்தில் | - | யமுனை |
| உரோமத்தில் | - | முனிவர்கள் |

| | | |
|---|---|---|
| உதரத்தில் | - | பூமாதேவி |
| முலையில் | - | சமுத்திரம் |
| வயிறு, இருதயம், முகம் | - | காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும் |
| எலும்பிலும், சுக்கிலத்திலும் | - | யாகங்கள் |
| எல்லா அவயவங்களிலும் | - | கற்புடை மகளிர் |

நன்றி - சிவதருமோத்திரம்.

தங்கும் அகிலயோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கும் புனிதத்தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம் ஆனினங்கள்

சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத் தேவருடன்
காலமுழுதும் உலகனைத்தும் காக்கும் முதற் காரணராகும்
நீலகண்டர் செய்யசடை நிருத்தர் சாத்தும் நீறுதரும்
மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தமென்றால் முடிவென்னோ.

- பெரியபுராணம்.

## கோதானம்

இறக்கப் போகின்றவர் மரண சமயத்திலே தாம் செய்த பாவங்கள் நீங்கிச் சுககதிப் பேறெய்த வேண்டிக் கோதானம் முதலியவற்றைப் பிராமணரை வரித்துச் செய்க. அல்லது இறக்கப் போகின்றவரைக் குறித்து அவர் புத்திரர் முதலானோரும் செய்யலாமென நூல்கள் கூறும்.

சிரார்த்த தீபிகை
*அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்*

உ
சிவமயம்

# யாதினும் இனியீர் !

கோபூசை செய்தென்றும் கோயில்தோறும்
கும்பிட்டு வாழ்ந்தமக்கள் கோலம்மாறிக்
கோவினையே கொல்களத்தில் வெட்டிவீழ்த்திக்
கொத்துறொட்டி ஆக்கியுண்ணல் கொடுமையன்றோ.

தாமாகத் தாவரநல் லுணவையுண்டு
தமதுழைப்பும் தகுபயனும் தந்துவாழும்
கோமாதா குலத்தினையே கொன்றுதின்னும்
கொடுமையினைப் போக்கிடவே திரண்டுவாரீர்.

நம்முன்னோர்
தெய்வீகத்திருவுருவான பசுவைக் கோமாதா எனவும்
தருமத்தின் வடிவான எருதுகளை இடபதேவர் எனவும்
போற்றிக் காத்து வணங்கி வாழ்ந்தார்கள்.
வாழ்வு தழைத்தது; மகிழ்வு நிலைத்தது.

இன்றைய நம்மவர் அறியாமையில் மூழ்கி
வீதிக்குவீதி மாட்டிறைச்சிக்கடைவைத்து
கொல்களம் அமைத்துப்
பசுக்குலத்தைக் கொன்று தின்கின்றார்களே
நாடும் வீடும் சுடுகாடாகி நம்குலம் நலிகிறதே
இக்கொடிய பாவத்தைப் பார்த்திருப்பதும் பாவமன்றோ.

பசு காக்கும் பணியையும் உங்கள் பணியில் சேர்த்து
நீங்கள் பேசும் இடமெல்லாம் கதைக்கும் இடமெல்லாம்
பசுக்குலத்தின் பெருமையை எடுத்துச் சொல்லுங்கள்
உங்களுக்கு பசு புண்ணியம் கிடைக்கும்.
உங்கள் சொல் வலிமையுடையது.

இப்பணியை முன்னெடுக்குமாறு பணிந்து வேண்டுகிறேன்.

***சைவப்புலவர் சு. செல்லத்துரை***

உ
சிவமயம்

# நூல் முகம்

திருநிறையும் கோமாதா தெய்வமெனும் உணர்வோங்கத்
　　தினமும் அன்போடணைந்து
செய்யவேண்டுவ தெலாம் சீருறத் தான் முயன்று
　　செம்மையுறும் நிறைவு கண்டு
அருமையா யணைத்துச்சீமோந்து தன்னகத்தாம்
　　அன்பினது அமைதிகாட்ட
அனுதினம் தருபாலைத் தயிரினை மோரினை
　　ஆனநவநீதம் நெய்யை
பெருமைபெறும் ஆலயத் தபிஷேகம் அயலுளோர்
　　பிஞ்ஞகன் அடியர் சுற்றம்
பேரினர்க் களித்திடும் அன்னையை அறத்தினைப்
　　பேணிடும் நினைவேடெனும்
உருவுகொள் பிரசுரத் துரைத்திட முயன்றனன்
　　உயர்கலைஞன் ஆயமைந்தன்
ஒளிர்சைவப்புலவனாம் செல்லத்துரை பணியை
　　உவந்தேற்றுப் பயனுறுகவே.

*கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை*
ஓய்வுபெற்ற அதிபர்,
மயிலங்கூடல்,
இளவாலை.

உ
சிவமயம்

# அருளாசி

அன்புக்குரியவர்களுக்கு,

திருமதி சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக நினைவு அஞ்சலி நூல் எல்லோருக்கும் பயனுள்ளதாகிய பசுவினுடைய சிறப்பு அம்சத்தைக் கொண்டு பிரசுரமாவது காலத்தின் தேவைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

சைவசமயத்தின் வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுவது பசு. ஏனைய மிருகங்களுக்கு இல்லாத சிறப்பு பசுவிற்கு உண்டு. தேவாரங்கள் முதல் புராண இதிகாசம் வரை இதன் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. தாயினுடைய பிரதி விம்பமாகக் கருதப்படுவது பசு. அதனாலேயே அது அழும்பொழுது அம்மா என்று அழுகின்றது. பசுவின் ஒவ்வொரு உறுப்புக்களிலும் தெய்வங்களைப் பூஜிக்கின்றோம். பசுவிலிருந்து பெறப்படும் அனைத்துப் பொருள்களும் சமய பூசை வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதனால் பசுவைப் பூஜித்து வழிபடுவதே மனித வாழ்வின் தர்மம் ஆகும்.

இதன் சிறப்புக்களை எல்லாம் நூல்வடிவமாகத் தரும் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் முயற்சி வரவேற்கத்தக்கதாகும். ஈன்றபொழுதில் தன்மகனைச் சான்றோர் ஆக்கிவிட்ட தாய்க்கு சைவசமயத்தின் பெருமைக்குரிய பசுவினுடைய வரலாற்றை காணிக்கை ஆக்குவது அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சைவப்புலவர் சு. செல்லத்துரையினுடைய பணியை இறைவன் ஆசீர்வதிக்கவும் திருமதி சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

2ஆவது குருமகா சந்நிதானம்,
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள்.*
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

உ
சிவமயம்

## இரண்டாவது பதிப்பின்
# அணிந்துரை

"யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" என்பதும் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்பதும் எமது சிந்தனைகளை உணர்ச்சிபெற வைக்கின்ற திருமுறைகளின் அடிகளாகும்.

பாலர் முதல் வயோதிபர் வரை உயிர்வாழ்வதற்கு உகந்த அமுதம் பசுவின் பாலாகும். மனித வாழ்வுக்கு வேண்டிய அனைத்தையும் தரும் பசுவானது பெற்ற தாய்க்குச் சமமானது.

இந்த வகையில் பசுக்களைப் பேணிக்காக்கும் உயர்ந்த தருமத்தை தனது அன்னையின் பெயரால் எமக்கு நினைவூட்டித் தருகின்றார் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.

இவர்களின் எழுத்தாற்றலும் சொல்லாற்றலாலும் இறைநம்பிக்கையை எந்நேரமும் எம்முள்ளத்தில் ஊட்டுவதாகும். நாடும் வீடும் நலம்பெற நன்மைதரும் செய்திகள் பலவற்றை வெளியிடுபவர் இவர். தனது அன்னையின் முதலாவது ஆண்டுத்திதியிலும் இன்றுவரும் இரண்டாவது ஆண்டுத் திதியிலும் "**கோமாதா**" என்ற தலைப்பில் எமது சிந்தைக்கு உயர்ந்த கருத்தை தந்திருக்கிறார் சைவப்புலவர் அவர்கள்.

எனவே இப்புலவரைப் பெற்ற அன்னையையும் இவர் உள்ளத்தில் எழுந்திருக்கும் தர்மசிந்தனையையும் பாராட்டிப் போற்றி அமைகின்றோம்.

***கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி***
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

உ
சிவமயம்

# பதிப்புரை

"தர்மத்தின் வழிச்செல்கை கடன்" என்பது தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானின் வாக்கு. பகுத்தறிவுபடைத்த உயர்ந்த பிறப்பாகிய மனிதராய்ப் பிறந்து வாழும் நாம் நமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழவேண்டும்.

எமது உடலுக்காகத் தினமும் உணவு, உடை முதலான எத்தனையோ கருமங்களைச் செய்கின்றோம். எங்கள் உயிருக்காக என்ன செய்கின்றோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். உடல்வளர உணவுபோல உயிர்வாழத் தர்மம் வேண்டும். ஆகவே தர்மத்தின் வழியிலே வாழ்வோமேயானால் உடலும் வளரும், உயிரும் வளரும், வாழ்வும் பயனுடையதாகும்.

சிவபெருமான் இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ளார். தருமமே இடபமாகிச் சிவபெருமானுக்கு வாகனமானது. தர்மமே இடபதேவரானது என்றால் தருமத்தின் பெருமைக்கும் இடபத்தின் பெருமைக்கும் இணையில்லையல்லவா.

இந்த இடபமாகிய விடையின் குலத்தை நாம் மாடுகள் என்போம். மாடு என்றால் செல்வம் என்பது பொருள். அவை நாம் கழித்தவற்றை உண்டு தம் கழிவுகள் முதலான அனைத்தையும் நமக்குத் தந்து நம்மைத் தாயாகி நின்று வாழ்விப்பன.

"விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபி குலம்" என்று சேக்கிழார் சுவாமிகள் போற்றுவார். எனவேதான் பசுவின் உடலிலே அனைத்துத் தெய்வங்களும், தீர்த்தங்களும், உலகங்களும், முனிவர்களும் கோயில் கொண்டிருக்கின்றார்கள். அதனால் பசுவைக் கோமாதா எனப்போற்றி வழிபடும் வழக்கு நம் சைவத்தில் பெருவழக்காய் உள்ளது.

இடபங்களைத் தருகின்ற பசுக்குலத்தின் பெருமைக்கு நிகர் எதுவுமேயில்லை. பசுக்குலமாகிய கோமாதாக்களை போற்றிக்காக்கும் தர்மத்திற்கு நிகரான தர்மம் வேறில்லை.

கலிகாலக் கொடுமையினால் நம்மவருட் பலர் தம் பகுத்தறிவை இழந்து பசுக்களைப் போற்றாதொழிதல்

மட்டுமன்றித் தமக்கு உணவாக்கும் இழிநிலை பெருகிவரும் இவ்வேளையில் "பசுவின் பெருமை" பற்றிய சிந்தனையைத் தூண்டவல்ல இச்சிறுநூலை வெளியிட எண்ணினோம்.

சங்க காலம் முதல் இக்காலம் வரை சான்றோர்களால் எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலானவற்றில் கிடைத்தவற்றைத் தொகுத்துப் பசு பற்றிய கருத்துக் களஞ்சியமாக இதனை உருவாக்கி உள்ளேன்.

அருளாசி, அணிந்துரை, நூல்முகம் முதலான எல்லா விடயங்களிலும் பசுவின் பெருமையே சொல்லப்படுகின்றது. திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் முதலான நூல்களிலிருந்து பாடல்களும் சில தரப்பட்டுள்ளன.

இது போன்ற இன்னும் பல நூல்கள் பல்வேறு இலக்கிய வடிவங்களில் வெளிவர இம்முயற்சி ஒரு தூண்டுகோலாக அமையுமாயின் அது பெரும் பயனாகும்.

பசுகாக்கும் பணியில் பல பெரியவர்கள் பலவிதமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் இவ்வேளையில் இதுவும் அதில் ஒரு துளியாகச் சேரட்டுமே எனக்கருதினோம்.

என் கருத்துக்கள் மட்டுமன்றி பல அருளாளர்கள், பெரியார்கள் பசுவின் பெருமை பற்றி உணர்த்திய செய்திகளையும் தொகுத்து வெளியிடும் வாய்ப்பும் கிடைத்தது.

பசு வளர்த்துப் பயிர் வளர்த்துப் பக்குவமாய் எமை வளர்த்த என் மாதாவின் ஆறாவது ஆண்டுத் திதியில் மூன்றாவது பதிப்பாக மேலும் பல தகவல்களுடன் இக் கோமாதா வெளிவருகிறது. இதற்குதவிய அனைவர்க்கும் நன்றியுடையேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

*சைவப்புலவர் சு. செல்லத்துரை*

"புனிதவாசம்"
பத்தாவத்தை,
இளவாலை.
2005-02-25

உ
சிவமயம்

# வாழ்த்துரை

## காலத்திற்கேற்ற கருவூலம்

சைவசமயத்தின் தாற்பரிய கருவூலமாகத் திகழ்வது பசுவாகும். பசுவின் பால், கோசலம், கோமயம் என்பன புனிதமாகப் பேணப்படுகின்றன. ஆலயக் கருமங்கள் தொடங்கி, வீட்டுக்கிரியைகள் வரை பசு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பசுவின் சாணம், திருநீறாக எமது நெற்றியில் திகழ்கின்றது. பசு அழும் போதும், கன்று தாயை அழைக்கும் போதும் அம்மா என்றே அழைப்பதினால் மனிதப்பிறவி போல், பசுவையும் பாதுகாத்துக் காப்பது எமது தலையாய கடமையாகும்.

இத்தகைய பசுவின் பெருமையை உணர்த்தும் வகையில் கலாபூஷணம், சைவப்புலவர் உயர்திரு சு. செல்லத்துரை அவர்களது கோமாதா என்னும் கருத்துக் களஞ்சியம் கொண்ட நூலை, மீண்டும் மீள்பதிப்புச் செய்து வெளிக்கொணர்வது மிகவும் பொருத்தமானதும், இன்றைய காலத்தேவைக்கேற்றது மான சிறந்ததொரு பணியாகும்.

தற்காலத்தில் வாழும் சான்றோர் வரிசையில் திரு. செல்லத்துரை அவர்கள் மிகவும் சிறந்ததொரு இடத்தை வகிக் கின்றார். சைவசமயத்தின் தாற்பரியத்தை உணர்ந்து தமது வாழ்க்கையை அமைத்து அதற்கு அமைவாக வாழ்ந்து வருபவர். சைவம், சைவசித்தாந்தம் தொடர்பான அம்சங்களில் மிகவும் புலமை பெற்ற இவரது ஆக்கங்கள், இன்றைய இளம் சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் பயன்பாடு உடையதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கோமாதாவின் சிறப்பினை எடுத்துரைக்கும் இந்நூலை அனைவரும் படித்துப் பயன் பெறுவதுடன் நின்றுவிடாது வாழ்க்கையின் இலட்சியங்களில் பசுவைத் தெய்வமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமையுணர்வுடன் அனைவரும் வாழ்ந்திடத் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

காலத்தேவையை உணர்ந்து நல்ல அம்சங்களைத் தொகுத்து, கோமாதா கருத்துக் களஞ்சியத்தை வெளியிடும் கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இது போன்ற பல நூல்களை திரு. செல்லத்துரை அவர்கள் வெளிக்கொணர எடுக்கும் முயற்சி களுக்கு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கைகொடுத்து உதவும். காலத் தேவைக்குப் பொருத்தமான பயன்பாடுகள் யாவும் நல்ல மனிதர்களால் தான், உருவாக்க முடியும் என்பதற்கு திரு. செல்லத்துரை அவர்களின் பணி முன் உதாரணமாகும்.

இப்பணிகள் யாவும் மேலும் தொடர வேண்டும். நூலாசிரியருக்கு நீண்ட ஆயுளும் சுபீட்சமும் கிடைத்திட இறையருளை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*
*இல. 248 ¹/₁ காலி வீதி*
*கொழும்பு - 04.*

**எஸ். தெய்வநாயகம்**
உதவிப்பணிப்பாளர்
*(ஆராய்ச்சி)*

உ
சிவமயம்

# வாழ்த்துரை

## பசுக்கொலை தொடராது பாதுகாப்போம்

இறைவனின் இனிய படைப்பு இப்பிரபஞ்சம். எண்ணற்ற ஜீவராசிகளை தோற்றுவித்தான் இறைவன். பிறவிகளில் அரியபிறவி மானுடம் என்பது மகாஞானிகள் கருத்து. ஆறறிவுடைய மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவன். நன்மை எது தீமை எது என்று கருதும் வாய்ப்புப் பெற்றவன். அரிய பேறுகள் பெற்ற மனிதனிடம் உயரிய பண்புகளை உலகம் எதிர்பார்க்கிறது.

உலகில் தோன்றிய உன்னத மதமாகிய சைவசமயம் வாழ்வியல் நெறிமுறைகளைக் கூறுவதுடன், பிறவித் தத்துவத்தை தெளிவுற விளக்கும் ஒப்பற்ற சமயமாக விளங்குகின்றது. எவ்வுயிரிலும் இறைவன் நிறைந்துள்ளான் என்பது சைவசமயத்தின் அடிப்படைக்கொள்கை. அந்நிலையில் எவரையும் வருத்தக்கூடாது. என்ற உயர்தன்மையை சைவசமய நூல்கள் யாவும் உலகுக்கு உணர்த்தி நிற்கின்றன. மனிதன் தன்னைப் பெற்ற தாய் மீது கொண்டுள்ள பற்று தாயின் பணி தொடரும் பசுவிடத்திலும் தொடர்தல் உயர் தர்மமாகும். தாய் பாலூட்டி உயிர் தந்தது போல் இத்தரணியில் உயிர்காக்க உதவும் பசுவை முன்னோர்கள் தெய்வநிலையில் வைத்துப் போற்றினர். இல்லை என்று சொல்லாது சுரக்கும் மகாலக்ஷ்மி பசு என்று வாழ்த்தினர்.

ஆலயங்களில் நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தின் போது பசுவுக்கு முதன்மை கொடுப்பர். வீடு குடிபுகுதலின் போது பசுவை வணங்கி ஆசிபெறுவர். திருமணக் கிரியையில் கோபூசையின் பின்பே ஆசீர்வாதங்கள் நடைபெறும். பிதிர் யாகங்களின் போதுகூட கோதானம் வழங்கி சிவாச்சாரியார் களின் ஆசியைப் பெறுவர். எல்லா வழிபாடுகளிலும் முதன்மை பெறும் பசுவை இன்று சிவபூமியாகிய ஈழநாட்டில் இறைச்சிக்குச் சிலர் பயன்படுத்துவது அறிந்து பெரும் துன்பம் அடைகிறேன். பசுவை மட்டுமல்ல எப்பிராணிகளைக் கொன்று உண்பதும்

பாவத்துக்குரியது. பசுவைக் கொல்லுதல் பெரும் பாவத்துக் குரியது. காரணம் பால் தந்த தாய்க்கு ஈடான சீவனை கொன்று உண்ணுதல் நன்றியிலாச் செயலாகும்.

கைகேசியின் வரத்தினால் இராமன் காடு ஏகினான். இராமனின் பிரிவுத்துயர் தாங்காது தந்தை தசரதன் உயிர் நீத்தான். இச்செயலறிந்த கைகேசியின் மகன் பரதன் மிகுந்த வேதனையுடன் தன் தாயாகிய கைகேசியை திட்டுகிறான். அவளைக் கொல்ல வேண்டும் போல் கோபம் வருகிறது பரதனுக்கு. எனினும் முலை தந்தாளைக் கொல்லல் நன்றி மறந்த செயல் என உணர்கின்றான். இதனைக் கம்பன் பின்வருமாறு குறிப்பிட்டான்.

நோயீர் அல்லீர் நுங் கணவன் தன்னுயிர் உண்டீர்
பேயீரே மாயீர் மாயவன் பழி தந்தீர் முலைதந்தீர்.

உயிர் வாழ உதவியவரை உள்ளளவும் நன்றி காத்தல் கடனாகும்.

பசுக் கொலை தொடராது பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும். இப்பணியில் பெரிதும் அக்கறை கொண்டு உழைப்பவர் சைவப்பெரியார், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள். அவர்களின் இத்திருப்பணி நன்றிக்குரியது.

நோய்வாய்ப்பட்ட பசுக்களை, மிருகங்களை கருணையோடு பாதுகாக்கும் காப்பகங்கள் சைவக் கோவில்களால், நிறுவனங்களால் உருவாக்கப்பட வேண்டும். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள கருணை நிலையங்களில் மிருகங்களை மிகப் புனிதமாகப் பாதுகாக் கிறார்கள். இத்தகைய நல்ல திட்டங்கள் ஈழத்திருநாட்டில் உருவாக்கப்பட வேண்டும். உயிர்களைப் பலி கொடுத்து உண்ணும் துன்பம் தொடராது இருக்க இறைவனைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

***செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்***
*உபஅதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,*

உ
சிவமயம்

# வாழ்த்துரை

## கோமாதா எங்கள் குலமாதா

பசுத்தாயைப் பற்றி எனது குருநாதர் அடியேனை சில வார்த்தைகளை தனது பொக்கிசமாகிய இந்நூலில் எழுதும்படி எனக்குக் கட்டளை இட்டுள்ளார். எனக்கு இந்தப் பசு வண்டியில் ஏறுவதற்கு நின்று கொண்டு சென்றாலும் பரவாயில்லை. இந்த அரிய வாய்ப்பை எனக்கு அந்த குலமாதா குரு மூலமாக அறிவித்துள்ளார் போல் என் மனக்கண் முன் தோன்றுகிறது. ஒரு மானிடன் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து இறக்கின்றான். ஆனால் சில மானிடர்கள் இறப்பதில்லை. தொடர்ந்தும் எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். இப்படியானவர்களில் ஒருவர்தான் சைவப்புலவர் செல்லத்துரை ஐயா. இவர் இன்று இந்நூலை அச்சேற்றி எங்கள் கரங்களில் தவள விடப்போகின்றார். இதையிட்டு நான் அவருடைய சேவைகளை எண்ணி சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

போர்த்துக்கேயர் காலத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாச முனிவர் என்ற உத்தமரை இன்னும் வரலாறு கூறிக்கொண்டே இருக்கின்றது. அவர் இந்த குலமாதாவை தனது குடும்பத்தின் பெயரால் கொலைக் களத்திற்கு அனுப்பி அந்தப் புலையர்கள் கைகளில் கிடைக்கப் பெறக்கூடாது என்ற காரணத்திற்காக சொந்த வீடு வாசலை, மண்ணை தூசென மதித்து அயல் நாட்டிற்கு இரவோடு இரவாக வெளியேறி அங்கே சிறப்புடன் வாழ்ந்த வரலாறு இன்னும் கலங்கரை விளக்காக எம்முன் காட்சி தருகிறது.

இதுமட்டுமா பசுக்குலத்தை பாதுகாப்பதற்காக எத்தனையோ புத்திஜீவிகள், அறிஞர்கள் அயராது உழைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றை எல்லாம் நாங்கள் ஒரு நிமிடமாவது சிந்திக்க வேண்டாமா? மானிடனாகப் பிறந்த எங்களுக்கு விலங்கினங்களிலும் பார்க்க ஒரு அறிவை ஆண்டவன் கூடுதலாகத் தந்துள்ளார். அந்த அறிவைப் பயன்படுத்தத் தெரியாதவர்களை நாங்கள் மிருகங்களாகவே கணிப்பிடுவோம்.

இந்துக்களாகப் பிறந்து ஒவ்வொரு ஆலயம், ஆலயமாகச் சென்று அங்கப் பிரதிஸ்டை. காவடி எடுத்தல், தீமிதித்தல் போன்ற நேர்த்திகளையெல்லாம் ஆண்டவன் சந்நிதியில் தவம் இருந்து நிறைவேற்றுகின்றோம். இப்படியெல்லாம் நிறைவேற்றி இனிதே அந்த உத்தரவை ஆண்டவன் தங்களுக்கு யாவும் நிவர்த்தி செய்து பரிபூரணமாகப் பிரகாசிக்கின்ற அரும் பெரும் கொடையாக விளங்கும் பெரும் செல்வமாகிய விபூதிப் பிரசாதத்தை தங்களுக்கு அளித்து நீங்கள் கேட்பனவற்றை எல்லாம் தந்தருள்கின்றாரே! இதுதான் நியதி இதுதான் படைப்பு, இதுதான் ஆண்டவன் கட்டளை என்று ஏற்று அகமகிழ்ந்து பெற்று உங்களுடைய இல்லங்களுக்கு எல்லாம் கொண்டு சென்று மனைவி பிள்ளைகளுக்கு எல்லாம் கொடுத்து இன்முகமாக வாழ்கின்றீர்களே.

இவற்றையெல்லாம் திரும்ப மீட்டுப் பார்ப்பதில்லையா? இதனுடைய மூலவேர் எங்கே உள்ளது? இவற்றையெல்லாம் ஆண்டவன் ஏன் படைத்துள்ளார். நாங்கள் என்ன செய்கின்றோம்? நாங்கள் ஏன் நேர்த்திக்கடன் செய்ய வேண்டும்? ஏன் ஆலயம் ஆலயமாக தரிசிக்க வேண்டும்? யாத்திரை போக வேண்டும். ஏன் குறிப்பிட்ட நாட்களுக்கு காவி வஸ்திரம் அணிய வேண்டும்? பகல் முழுவதும் தண்ணீர் அருந்தாமல் உபவாசம் இருந்து இரவு பாலும் பழமும் சாப்பிட வேண்டும்? இப்படி எமது உடலை ஏன் வருத்த வேண்டும்? சொல்லிக் கொண்டே போனால் இதன் முடிவே இராது. கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எனது பேனாவில் உள்ள மை முடியும் வரைக்கும் எழுதிக் கொண்டே போகலாம்? இதுவும் ஆண்டவன் சோதனை தான்? இப்போதாவது தங்களுக்கு இவற்றையெல்லாம் ஏன் எழுதுகின்றேன் என்ற உணர்வு கட்டாயம் ஆண்டவன் அருளாசியினால் கிடைக்கப் பெற்றிருக்கும் என்ற பரிபூரண நிறைவுடன் குலமாதாவாகிய அருட்பெரும் செல்வமாகிய கோமாதாவின் பாதங்களை வணங்கி விடை பெறுகின்றேன்.

வளர்க எம்பணி! வாழ்க மானிடம்! வாழ்க கோகுலம்,

இப்படிக்கு
***கு. கங்கைவேணியன்***
பசுக்கள் இடபங்கள் பாதுகாப்புச்சபை
அமைப்பாளர்.

*'வேணி களஞ்சியம்"*
*165, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# உள்ளே உள்ளவை.......


| | |
|---|---|
| யாதினும் இனியீர்! | V |
| நூல்முகம் | VI |
| அருளாசி | VII |
| அணிந்துரை | VIII |
| பதிப்புரை | IX |
| வாழ்த்துரை | XI |
| வாழ்த்துரை | XIII |
| வாழ்த்துரை | XV |
| கோபூசை செய்வோம் | XVIII |
| கோமாதா | 1 |
| பலரும் பேணும் பசு மகிமை | 7 |
| பசுவின் பெருமை | 10 |
| பசு ஓம்பல் | 14 |
| பசுகாக்கும் முறை | 16 |
| கோதானம் | 17 |
| கபில பூசை | 20 |
| நோவன செய்யன்மின் | 21 |
| உணவும் மருந்தும் | 22 |
| பசுவின் பெறுமதி என்ன | 26 |
| தைத்திருநாள் பட்டிப்பொங்கல் செய்தி | 28 |
| கோபுரதரிசனம் கோடி புண்ணியம் | 29 |
| வாழிய ஆனினம் | 31 |
| பசுவதை சட்டத்தை எதிர்த்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் | 32 |
| கோ ஸம்ரக்ஷணம் லோகஸம்ரக்ஷணம் | 33 |
| பசுவின் குரல் | 35 |
| கோமாதா பொன்மொழிகள் | 36 |
| திருக்கடவூர் மயானப் பதிகம் | 38 |
| பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் | 40 |
| இணையத்தின் நோக்கங்கள் | 42 |
| பசுவதை செய்யாதீர்கள் | 43 |
| எங்கள் கோகுலசாலையில் உங்கள் முதிய மாடுகளைக் காப்போம் | 44 |
| நன்றி சொல்லிப் பாராட்டுகின்றேன் | 45 |
| அன்னைசொல் - தன்கதை | 46 |

உ

சிவமயம்

# கோபூசை செய்வோம்

பசுவின் உடம்பெங்கும் நாம் வழிபடும் அத்தனை தெய்வங்களும் நமக்கு பயனளிக்கும் தேவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆலயத்திலே இருக்கின்ற விக்கிரகத்தில் மூர்த்தியை (ஆவாகனம்) வரவழைத்து இருத்திப் பூசிப்பர். ஆனால் பசுவில் இத்தெய்வங்கள் எல்லாமே தானாக உறைவர். எனவே நாம் கோபூசை செய்து வழிபட்டு நல்ல பயனைப் பெறுவது சுலபமல்லவா. பசுவின் பின்வரும் உறுப்புக்களுக்குப் பூஜை செய்யும் போது உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள்:

| | |
|---|---|
| இரு கொம்புகளின் நடுவே | ஓம் சிவாய நம |
| வலது கொம்பில் | ஓம் பிரம்மணே நம |
| இடது கொம்பில் | ஓம் விஷ்ணுவே நம |
| கொம்பின் நுனியில் | ஓம் சரஷ்சஷ்டி கோடி தீர்த்தேப்யோ நம |
| மூக்கின் நுனியில் | ஓம் த்யேஷ்டாயை நம |
| வலது கண்ணில் | ஓம் சூர்யாயை நம |
| இடது கண்ணில் | ஓம் சந்திராயை நம |
| பற்களில் | ஓம் மாருதாயை நம |
| தாடையில் | ஓம் வருணாயை நம |
| மேலுதட்டில் | ஓம் யக்ஷேப்யோ நம |
| கீழுதட்டில் | ஓம் யமாய நம |
| கழுத்தில் | ஓம் இந்திராய நம |
| குளம்பின் மேற்பாகத்தில் | ஓம் அப்ஸரேப்யோ நம |
| குளம்பின் நுனியில் | ஓம் நாகேப்யோ நம |
| கால்களில் | ஓம் கணேப்யோ நம |
| பத்து நாடிகளில் | ஓம் நேத்ரேப்யோ நம |
| மடியின் அடியில் | ஓம் ஓம் பிருகுப்யோ நம |
| மடியின் நுனியில் | ஓம் சகோரேப்யோ நம |
| இருதயத்தில் | ஓம் உமாதேவ்யை நம |
| யோனியில் | ஓம் மகாலக்ஷ்மியை நம |
| உரோமங்களில் | ஓம் தேவேப்யோ நம |
| கோமயத்தில் | ஓம் பிரும்மனே நம |
| கோமூத்திரத்தில் | ஓம் விஷ்ணுவே நம |
| பசுவின் நெய்யில் | ஓம் ருத்திராய நம |
| பசுவின் தயிரில் | ஓம் ஈஸ்வராய நம |
| பசுவின் பாலில் | ஓம் சதாசிவாய நம |


***சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன்***

*சைவப்பிரச்சார அமைச்சர்,*

*அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்*

உ
சிவமயம்

# கோமாதா

"பசு பால் தரும்" "பசு சாதுவான மிருகம்" என்பது நாம் பாலர் வகுப்பில் படித்த பாடம்.

- தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவர்க்கும், குழந்தைப்பருவம் முதல் விருத்தப் பருவம் வரை பால் தந்து காப்பது - பசு
- நம் உயிர் பிரியும் வேளையிற் கூட இறுதியாக (உற்றார், உறவினர்) எம் வாயில் விடப் பால் தருவது - பசு
- ஆதலால் தாய்மார்களுக்கு எல்லாம் அரசியாகவும் (கோ-அரசு, மாதா-தாய்) பசுத்தாயாகவும் (கோ-பசு, மாதா-தாய்) கோமாதா எனப்போற்றப்படுவது - பசு
- நாம் கழித்துவிடும் புல், தவிடு, கஞ்சி, வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது - பசு
- தனது கழிவுப் பொருட்களான சாணியையும், மூத்திரத்தையும் கூட பயிர்வளர்க்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும், கிருமிநாசினியாகவும் தருவது. - பசு
- நமது வீட்டையும் சுற்றாடலையும் கூடச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமான சாணியைத் தருவது - பசு
- எல்லாத் தேவர்களும், முனிவர்களும், புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் எழுந்தருளி இருத்தற்குரிய தெய்வத்திருவுரு - பசு
- எல்லாத் தேவர்களின் அனுக்கிரகத்தையும் பெறுவதற்குரிய வழிபாட்டுப் பொருளாயிருப்பது - பசு
- சைவசமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணியாகவாசனத்துக்குரிய பாலைத் தருவது - பசு
- இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்ச கௌவியமாகிய பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மையுடையது. - பசு
- சைவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் முன் கருவறையைத் தூய்மை செய்து தேவர்களின் ஆசியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவது. - பசு

- சைவாலய நித்திய பூசையில் கோபூசை செய்து மலரிட்டுத் தூபதீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்து வணங்கப்படுவது. - பசு
- சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபில பூசைக்கு உரியது - பசு
- கோதானப் பொருளாவதன் மூலம் பாவம் நீக்கிப் பெரும் சிவ புண்ணியத்தை ஈட்டித்தருவது. - பசு
- சிவகதி நல்கும் சிவசின்னமான திருநீற்றின் மூலப் பொருளான சாணியின் உற்பத்தித்தானமாய் இருப்பது. - பசு
- புது வீடு அமைக்கும் போது தான சுத்திக்காக அங்கு கட்டப்படுவது - பசு
- திருமணத்தின் போது மாங்கல்ய தாரணம் முடிந்தவுடன் எல்லாத்தேவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது - பசு
- மணமக்கள் நாள் முகூர்த்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்திற்கான பாலைத் தருவது. - பசு
- அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வீட்டிற்கு வரும்போது வாயிலில் தரிசனமாவது - பசு

இவ்வண்ணம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளிலும் உடனிருந்து எம்வாழ்வை புண்ணியநெறிப்படுத்தவல்ல பசுவைப் போற்றி வளர்ப்பது எம் தலையாய கடமையாகும்.

பசுவுக்கு உணவுகொடுத்தல் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய இன்றியமையாக் கடமை என்பது "யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை" எனும் திருமூலர் திருமந்திரத்தால் உணரப்படும்.

பசு ஓம்புதல் இம்மை மறுமையாகிய இருமைப் பயனையும் தரவல்லது.

திருமூலர், சண்டேசுரர், ஆனாயநாயனார், மனுநீதி கண்டசோழன், ஞானப்பிரகாச முனிவர் முதலானோர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்கு ஆதாரம் ஆகும்.

## திருமூலர்

இமயத்திலிருந்து தென்நாடு நோக்கி வந்த சுந்தர முனிவர் என்பவர் வரும் வழியில் பசுமேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடப்ப அவனைச்சூழ்ந்து நின்று பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதைக் கண்டார்.

பசுக்களின் துயர்துடைக்காது செல்வது பாவம் எனக்கருதித் தன் யோகசித்தியினால் தனது உடலை ஒரு மரத்தின் மேல் கிடத்திவிட்டு மூலன் உடலிற்புகுந்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார்.

மீண்டும் வந்தபோது தன் உடலைக் காணாமையால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தில் தவமிருந்து மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப்பெயர் பெற்றுச் சிவகதி அடைந்தார். பசு காத்ததாலே திருமூலர் ஆனார்.

## சண்டேசுரர்

பசுமேய்ப்பவன் ஒருவன் பசுவைக்கோலால் அடித்ததைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாத விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் அன்று முதல் மேய்ப்பானை விலக்கித் தானே பசுக்களை மேய்த்து வந்தான். மண்ணியாற்றங்கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தாமாகச் சுரந்து பொழிந்த பால் கொண்டு அப்பால் வீணாகாவகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வழிபட்டார்.

இதன் உண்மையை அறியாத மூடர் சொற்கேட்ட தந்தையார் பாலை மண்ணில் சொரிந்து பாழ் செய்கிறானே என அதைக்காலால் இடறத் தன் சிவபூசைக்குக் குந்தகம் செய்தவர் காலைச் சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாகித் தந்தையின் கால்கள் தறிபட்டன.

சிவபூசையின் உறுதி கண்ட சிவபெருமான் தந்தைக்கும் தனயர்க்கும் அருள்புரிந்து விசாரசருமருக்குச் சிவ வழிபாட்டின் பலன் நல்கும் சண்டேசுரர் பதம் நல்கினார். பசு ஓம்பலின் பயன் சண்டேசுரர் பதம் நல்கியது.

## ஆனாய நாயனார்

இவர் பசுக்குலம் மேய்த்தலையே சிவப்பணியாகக் கொண்டவர். புல்லாங்குழல் இசைக்கும் பேரிசையாளர். பஞ்சாட்சர மந்திரத்தைப் புல்லாங்குழலில் இட்டு இசைத்துப் பசுக்களை மகிழச் செய்பவர். இவரது பஞ்சாட்சர இசையில் தேவர்களும் தம்மை மறந்து மகிழ்ந்தனர். சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளும் தம் மூர்க்கம் தணிந்து தெய்வ இசைப்பட்டன. இசையால் பசு மேய்த்த சிவபுண்ணியத்தால் ஆனாயர் சிவபதம் பெற்றார்.

## மனுநீதி கண்ட சோழன்

தன்மைந்தன் அரசவீதியில் உலாவரும் போது தேரினிடைப்புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்தது. இதனைக்கண்ட தாய்ப்பசு தாங்கொணாத் துயரால் கண்ணீர் விட்டுக்கதறி அழுதது. இதை அறிந்த மன்னன் பெரும் துயருற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயரைத்துடைக்க உதவா என உணர்ந்தான். தன் ஒரே மகனை இழந்து வருந்தும் தாய்ப்பசு போலத் தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறையெனத் துணிந்தான். தன் மகனை வீதியிற் கிடத்தித் தானே அவன் மீது தேரைச் செலுத்திக் கொன்றான். **"தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்த அருமந்த செயல்"** கண்ட சிவபெருமான் அருளால் பசுக்கன்றும் அரசிளங்குமரனும் உயிர்பெற்று அனைவரும் சிவகதி பெற்றனர். ஒருபசுவின் கன்றைக் கொன்றதற்காகத் தன்மகனைக் கொன்று பசு ஓம்பிப் பரகதி பெற்றார் மனுநீதிச்சோழன்.

## ஞானப்பிரகாச முனிவர்

இலங்கையிற் போர்த்துக்கேயர் ஆட்சி நடந்த காலம், யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவமக்கள் வாழ்ந்த காலம், போர்த்துக்கேயப் பறங்கியருக்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் கொழுத்த பசுக்கொடுக்க வேண்டிய கொடிய சட்டம். தன் முறை வந்தபோது பசுக் கொலையாகிய கொடிய பாவம் செய்வதிலும் பார்க்கப் பரதேசம் போவதே மேலெனக் கருதி இரவோடிரவாக கடல்கடந்து இந்தியா சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார். பசுக்கொலைக்கு அஞ்சிப் பரதேசம் போய் சிவகதி பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர்.

இவ்விதம் சிவகதி நல்கவல்ல தெய்வப் பசுவுக்கும் அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது? கொன்று தின்கிறார்களே. உடல்வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப்பாவத்தைச் சேர்த்துப் பாழ்படுகின்றார்களே. பசுவின் ஊனைத்தின்று தம் ஊனைப் பெருக்குகின்றார்களே.

வள்ளுவரையும் திருக்குறளையும் வானளாவ வாயாரப் போற்றிப் புகழ் பெறும் கனவான்கள்,

"தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" என்பதை அறியார்களா?

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற குறளை ஏன் படித்தார்கள். கொல்லும் போது "என்னைக் கொல்லாதே" என்று கண்ணீர் வடித்து "அம்மா" எனக்கதறும் அவல ஒலி காதில் விழுவதில்லையா?

புலால் உண்பவர் புலையர் என்பதை மறந்து யார் யாரையோ புலையரெனப் போலித்தனம் காட்டுவது கொடுமையல்லவா.

பால்வற்றிய பசுவையும், இளைத்த பசுவையும் இறைச்சிக்கு விற்பது அடுக்குமா?

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு, தம் நெற்றியில் திருநீற்றைப் பூசிக்கொண்டு மாட்டிறைச்சி உண்பவர்களே! இக் கொடிய பாவத்திற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப்போகின்றீர்கள்.

பசுவின் குருதி ஒரு துளி நிலத்தில் வீழினும் அதிலிருந்து பலகோடி அசுரர்கள் தோன்றி உலகைக் கெடுப்பர் என்று நீதிநூல் சொல்லுவதைக் கேளுங்கள்.

அதை உண்பவர்கள் அரக்கர்களாகி அவர்களால் இந்த உலகம் படும் அவலத்தைக் கண்முன்னால் காண்கின்றீர்கள் அல்லவா.

கொன்றவனும் கொடுத்தவனும் தின்றவனும் கொடும்பாவிகளாகி மீளாத்துன்பத்தில் அழுந்துவர் என்பதை உணர்வதெப்போ.

அதிகபால் எடுக்கவேண்டும் என்பதற்காகப் புலால் எச்சங்களை அரைத்து மாஸ் எனும் பெயரில் பசுவுக்கு உணவாகக் கொடுப்பதும், புலால் உண்ட பசு தரும் பாலைச் சிவாலயத்துக்குக் கொடுப்பதும் பாவமான செயல் அல்லவா.

சைவச் சான்றோர்களே! பசுக்கொலையைத் தடுத்து நிறுத்தாமல், அதன் பாவத்தை உலகுக்குணர்த்தாமல் இருப்பது உங்களையும் அப்பாவத்தில் பங்காளிகள் ஆக்கி விடுமன்றோ.

மாட்டைத்தின்று மக்கள் அரக்கர்களாகும் நிலையை மாற்றி, மாட்டைக் காத்து மக்களைத் தேவர்களாக்கும் மார்க்கம் காட்ட முன்வாருங்கள்.

***சைவப்புலவர் சு. செல்லத்துரை.***

✪ ✪ ✪

## இடபதானம்

வைதிகர்களும் சைவர்களும் ஏகோதிட்டத்தின் முன் பரமசிவனுக்கு நீலஇடபம் விடுதலாகிய இடபோத் சரச்சனம் என்னும் கிரியை செய்க என்று காமிகாகமம் கூறும். மற்றுஞ் சிரார்த்தங்கள் அனைத்தும் செய்தாலும் சிவபெருமானைக் குறிக்கும் இடபம் விடாராயின் பிசாசுருவம் அகலாது.

சிரார்த்த தீபிகை
***அச்சுவேலி சிவஸ்ரீ. சு. குமாரசுவாமிக் குருக்கள்***

ஆயசிறப்பினாற் பெற்ற வன்றோ மன்றுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும் நகுவெண் தலைத்தொடையும்
ஏயவேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குத்
தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச்சுரபிகள் தாம்.
-பெரியபுராணம்

உ
சிவமயம்

# பலரும் பேணும் பசு மஹிமை

*இலக்கியகலாநிதி*
***பண்டிதமணி மு. கந்தையா.***

தமிழர் வாழ்வில் லௌகிகச் செழிப்புக்கும் வழிபாட்டுச் செழிப்புக்கும் ஒரே தரமான உயர்பங்களிப்பது பசு. 'பட்டி கிழக்கும் பட்டடை மேற்கும்' என்பது தமிழர் தம் வாழ்விடமான வளவொன்றின் அமைப்பியலில் ஒரு அம்சம். வளவொன்றில் வீட்டிற்கு கிழக்குப் பக்கமாக பட்டி இருக்கவேண்டும் என்ற நியதியை இது காட்டும். பட்டி என்றது பசுப்பட்டிக்கே உரிய பெயர். வெள்ளாடு செம்மறியாட்டுப் பட்டிகளுக்கு அது இரண்டாம் பட்சமான உபசாரம். தமிழர் வாழ்வியலில் பசு ஓம்புதலுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு இத்தகையது.

இயல்பு நிலையான இயற்கை வாழ்வில் வீட்டுக்குப் பரிமளிப்பூட்டுவன சாணம் மெழுகிய நிலம், சாணநீர் தெளித்த முற்றம், சாணப்பரிமணமான வீபூதிப்புழக்கம், பால்கொதிக்கும் நறுமணம், தயிர்கடையும் மத்தோசை, தாகசாந்திக்கு மோர் இருத்தல் என்பவை. சமகால வீட்டு நிலைபற்றிய நினைவுகளை ஒருகணம் ஒத்திவைத்துவிட்டு இவற்றை நினைவதிலும், ஆரோக்கிய வாழ்வில் இவற்றின் அத்தியந்த உபயோகத் தன்மைகளை ஆராய்தலிலும் அபாரமான திருப்தி விளைதல் தவிர்க்க முடியாததாகும்.

இனி எந்தவொரு சைவக்கிரியைக்கும் அவசியம் வேண்டியது சாணம் மெழுகிய நிலம், சாணப்பிடியிலமையும் பிள்ளையார், பசுப்பாலையன்றி அமையாத புண்யாஹ வாசனதீர்த்தம், ஹோமத்துக்காம் பால், தயிர், நெய், சுவாமி பூசையைச் செழிக்க வைப்பன. அபிஷேகத்துக்காம் பால், தயிர், நெய், கோசலம், கோமயம், பூஜா பத்ததிகளில் கோசலத்துக்குப் பெயர் இரத்னோதகம். சாணத்துக்குப் பெயர் அமிர்தமயம். இங்ஙனம் இவற்றின் பெருமை பேணப்பட்டிருப்பதிலேயே ஒரு தனி அருமை. இரத்தினம், அமிர்தங்களின் தன்மை, கோசலத்திலும் சாணத்திலும் உண்மையை நாம் உணர் கிறோமோ இல்லையோ அது வேறு விஷயம். அவை இருக்கவே இருக்கின்றதால் தான் அப்பெயர்கள் அமைந்துள்ளன. ஆகமங்களில் கழிவுப் பொருள்களே உத்தம திரவியங்களாய் இருத்தல் பசு மகிமைக்கு உந்நதமான உரையாணி.

சிவாகமங்களில் இங்ஙனம் பசு அருமை பேணப்படுவது ஒருவகை. வேதங்களிற் பசுஅருமை பேணப்பட்டுள்ள வகைகள் மற்றும் பலவுள. பசுவை "அஹன்யா" என்ற பெயரால் வேதம் குறிப்பிடுவது அவற்றுள் முதன்மையும் முக்கியமுமான செய்தி. அஹன்யா - கொல்லப்படத் தகாதது. ஹனு - கொல், ஹன்யா - கொல்லப்படத்தக்கது, அஹன்யா - கொல்லப்படத்தகாதது. எனல் சொற்பொருள் விளக்கம்.

பிரசித்தி பெற்ற "ருக்" வேதத்தில் ஒரு மந்திரம்

| | |
|---|---|
| மாதா ருத்ராணாம் | - உருத்திரர்களது அன்னை, |
| ஸ்வஸா ஆதித்யானாம் | - ஆதித்தியர்களின் சகோதரி, |
| துஹிதா வசூனாம் | - வசுக்களின் மகள், |
| அம்ருதஸ்யநாபிம் | - அமிருதத்தின் ஊற்றுமையம், |
| மாகாம் அநாகாம் | |
| அதிதிம் வதிஷ்டஅநாகாம் | - ஒரு பாவமுமறியாத அப்பிராணியும், |
| அதிதிம் | - எம்வீட்டு விருந்தாளியும் ஆகிய, |
| காம் | - பசுவை, |
| மாவதிஷ்ட | - கொல்லற்க. |

என இங்ஙனம் அருமையொழுக, அன்பொழுக, விதந்து தெய்வாம்சம் கமழப் போற்றியுள்ளது. 'ருக்' வேதம்.

சிவாகமங்களில் இதற்கும் மேலான சிவலோக உற்பத்தித் தொடர்பு பசுக்கள் பேரில் விபரிக்கப்பட்டுள்ளது.

சாமவேதத்தில் ஒரு மந்திரம் ஆகமிகப்பரிவுருக்கமான ஒரு பாணியில் பசுக்களினை வாழ்த்தியிருத்தல் இந்நூலின் மற்றோர் கட்டுரைப்பந்தியால் அறியலாகும்.

இனி, ஈழத்தில் ஆதிபுராதன தலைநகராக அகிலப்பிரசித்தி பெற்றிருந்த மாதோட்ட நன்னகரில் அதியுயர் புனிதப் பிராணிகளாக அன்றைய விஸ்வகர்ம மன்னராட்சியிற் பசுக்கள் போற்றப்பட்டிருந்தமையை நினைவூட்டும் பிற்காலச் சிங்கள சாசன ஆணை ஒன்றையும் கவனிக்கலாம்.

"இராமிசம்வதா புணமஹா வொற்றியோ எல மஹாகல பாவம் கத்தாக."

எல - பசு, மஹா வொற்றி-மாதோட்டம், கத்தா-பெறுநர்.

இவ்விதிகளை மீறுவோர் மாதோட்டத்திற் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவர் என்பது இதன் பொருள்.

மேய்க்கக் கொண்டுபோன பசு தன்பக்கம் தலையை அசைக்க அது தன்னைக் குத்தமுயன்றதாகத் தப்பர்த்தம் பண்ணிக் கொண்டு அதனை அடிக்கமுயன்ற இடைச்சிறுவனைத் தடுத்து விசாரசர்மர் இட்டதாக உள்ள ஆணையொன்று நம்பெரிய புராணத்தில் உண்டு. மேற்கண்ட சிங்கள ஆணைக்கு நேர்சமமான தமிழராணையாக அதை ஏற்றுக்கொண்டொழுகுதல் சைவநடைக்குக் கௌரவமாகும்.

பசுமகிமை இருந்தவாறு.

✪ ✪ ✪

## மாட்டிறைச்சியால் வரும் கேடு

மாட்டிறைச்சியால் பல வியாதிகள் உண்டாகும். பித்தத்தையும் கபத்தையும் அதிகரிக்கும், காம உணர்வை அதிகப்படுத்தும். எளிதில் சீரணமாகாது. தேகத்தில் ஒரு விதமான புலால் நாற்றத்தை உண்டாக்கும். அற்பவாத ரோகத்தைக் கண்டிக்கும்.

கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேருடம்பி
லாமா வியாதிக் களவுண்டோ - காமாதி
போகமுடன் மந்திக்கும் புன்வாதம் சேதமுறும்
தேகமதில் நாற்றமுறுந் தேர்.

**சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கம் பக்கம் : 268**

## சிவபூமியில் பசுவதை தகுமா!

மக்களுக்கு நல்வழிகாட்ட வேண்டிய உள்ளூராட்சிச் சபைகள் வருமான நோக்கத்திற்காக முன்னைய காலங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இல்லாத இடமெங்கும் மீண்டும் மீண்டும் விளம்பரம் கோரி மாட்டிறைச்சிக் கடைகளை அமைப்பித்துச் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் அதனை உண்ணும் பழக்கத்தை ஊக்குவித்தல் முறையா?

பசுக்களைத் தெய்வமாகப் பூசித்து வணங்க வேண்டிய சிவபூமியாகிய நமது மண்ணில் பசுக்களைக் கொல்வதற்குக் கொல்களங்களையும் அமைத்துக் கொடுக்கிறார்களே! இது முறையா? இது தகுமா?

-தர்மதீபம்

உ
சிவமயம்

# பசுவின் பெருமை

*பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம்.*

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க என்று பாடியருளியவர். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பால் ஊட்டியபின், பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா. சைவர் பசுவை தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமை உண்டாகாமற் போர் செய்வர். பசுக்களுக்குப் பாதுகாப்புத்தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர்.

பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்தும் பஞ்சகௌவியம், இவை அபிடேகத்திற்குரிய புனிதமான திரவியங்கள், பசுக்காத்தல் பெரிய அறம். பசு இனத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமை பெற்றது.

பசுவின் உயர்வு கருதியே சைவசித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக்கூறுகிறது. பசுக்களுக்கு தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றார். சைவசமயத்தின் முதல் நூலாகிய வேதத்திற்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுக்களுக்குத் துன்பம் வராமற் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப்பெரியவர்கள். சைவநெறியில் விதிக்கப்பெற்ற எண்வகையான ஸ்நானங்களுள் மாருதஸ்நானம் என்பதும் ஒன்று, பசுவின் காலில் பட்டதூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்நானம் எனப் பெறும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய திருநீறு பூசுதல் பார்த்திபஸ்நானம் என்பதாகும்.

பசுவை மாடு என்றும், ஆ என்றும், கோ என்றும், தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயரிட்டு அழைப்பர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பன எல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லாவாம் என்றும், பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்கமாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டுக்கு சமமாகும் என்றும் பாடுவர்.

"ஆவிலா மனையகம் அழகு குன்றுமே
ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்
ஆவிலா மனையகம் அமலை நீங்குவாள்
ஆவிலா நாடெலாம் அடவி யாகுமே."

இச் செய்திகளை எல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

"ஆவினைப் பிள்ளைபோல் அருத்திப் பேணுவர்
ஆவினைப் பெயர்குறித் தழைப்ப ராத்தரு
சேவினைச் சிறப்புற வளர்ப்பர் நெய்களில்
மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே."

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகிறார்கள் என்பதால் பசு புண்ணியப் பிறவி என்பதோடு புனிதமானதும் வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப்பாடுவார்.

ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்
ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)
ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்.

பசுவின் தலை உச்சியிற் சிவனும், நெற்றியிற் சக்தியும், மூக்கு நுனியில் முருகனும், கொம்புகளிற் பிரமாவும், விஷ்ணுவும், கண்களிற் சூரியனும் சந்திரனும் இன்னும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வமூர்த்தங்களும் இருப்பர் என்ப.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப்புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவி வரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப்பொங்கல் இடுபவராய நாம்,

அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் புரிந்து வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.

இன்னும் சைவசமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தல் ஆகாது என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி, அனைவர்க்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத்தருவர்.

இனி சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. "நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாகப் பாலைப் பொழியுங்கள், காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள நீர்நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக, நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக."

இன்புடைத் தைமதிப் பிறப்பி லேழ்பரி
வன்புடைத் தேரவற் போற்றி மற்றைநாட்
பொன்பெறு புதல்வரிற் புரியு மாக்களுக்(கு)
அன்பினாற் பொங்கலும் அமையச் செய்வரால்

இனிப்பசுவினைக் கொன்று தின்னும் பரதேசிப்பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளாலும், பறங்கியராலும் இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும், அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும், அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பாடுவர்.

ஆவினைக் கொல்லுதல் அவ்வூன் உண்ணுதல்
பாவிகள் தொழிலவை சைவப் பண்பல
மேவிய நிரயத்து வீழ்த்தி மாய்க்குமத்
தீவினை யொழித்தவர் தேவராவரே

மத்தியகாலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெருமதிப்புப் பெற்றிருந்தது. ஜெயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிரமபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில்

காலை வேளையில் சாணித் தண்ணீர் தெளிக்கும் தமிழ்க் கலாசாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாக கருதப்பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்தலாகாது என்னும் எழுதாவிதி நிலவியது. அன்றி பசுமாடு நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் வழக்கம் நிலவியது.

சிங்கள மக்கள் எவ்வாறாயினும் மாட்டிறைச்சி உண்டதில்லை என்று மஹாவன் (Mahavan) என்பார் 1413 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரை நாடுகளில் செல்வாக்குற்று மாட்டிறைச்சி உண்டு வந்ததைக் கண்ட சிங்கள மக்கள், அப்பறங்கியரை "அடிமைப் பறங்கியர்" என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதியுள்ளார்கள்.

நன்றி - ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம்.

✪ ✪ ✪

## பசுவின் குரல்

காருண்யம் மிக்க மனிதர்களே!

எமது பாலில் நீங்கள் வளர்கிறீர்கள், உங்கள் வயல்களுக்குப் பசளை தருகிறோம், எருதுகள் வண்டிகளை இழுக்கின்றன.இந்த மண்ணில் வளரும் புல்லை உண்டு உங்களுக்கு இவ்வளவு பயன்களையும் தரும் எங்களை நன்றி கெட்டுக் கொலைக் களத்துக்கு அனுப்புகின்றீர்களே! இது தகுமா!

தவத்திரு ஸ்ரீமத். சுவாதி தந்திரதேவா மகராஜ்
திருகோணமலை

உள்ளும் தகைமை இனிப்பிறவேறுளவே! உழைமான் மறிக்கன்று
துள்ளும் கரத்தார் அணிபணியின் சுடர்சூழ்மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம் பிராட்டியுடனே சேரமிசைக்
கொள்ளும் சினமால் விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபிகுலம்.

-பெரியபுராணம்

உ
சிவமயம்

# பசு ஓம்பல்

*ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.*

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும். அதன் பக்கத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவகைப் பசுக்கள் இருக்கும். இவை முறையே கபிலநிறம், கருநிறம், வெண்ணிறம், புகைநிறம், செந்நிறம் உடையனவாம். இவ்வைந்தும் சிவனது திருவருளினாலே திருப்பாற் கடலில் இருந்து சிவபூசையின் பொருட்டும், யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன. இப்பசுக்களின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்கும்.

இத்துணைச் சிறப்பினவாகிய பசுக்களை இயக்குங்கால், சிறிதும் வருந்தம் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங்கோலினாலே மெல்ல ஓங்கி போ போ என்று இயக்குக. இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்போர் நரகத்து வீழ்வர். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவைகளை வலஞ் செய்து, துதித்து வணங்கி, புல்லுக்கொடுத்தோர் சிவலோகத்தை அடைந்து, இன்புறுவர். பசுக்களைத் தீண்டினும் தீவினைகள் நீங்கி, நல்வினைகள் பெருகும். அவைகள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத்தரும்.

பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண், ஓடைமண், புற்றுமண், வில்வத்தடிமண், அரசடிமண் என்பவைகளால் நிலம்படுத்து, முதிர்கன்று, இளங்கன்று, நோயுள்ள கன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைக்க. நாடோறும் கோசல கோமயங்களை புறத்தே நீக்கி, சுத்தி செய்க. முசகம் வராமல் தூபம் இடுக, தீபங்கள் ஏற்றுக. சாலை எங்கும் பூமாலை நாற்றுக.

பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லி, மெல்ல மெல்ல புகுவித்து சிரத்தையோடு புல்லைக் கொடுக்க. நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணுக.

அட்டமி தோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி அன்னமும் ஜலமும் ஊட்டி, தூபதீபம் காட்டி வணங்குக.

பசுக்களை வேனிற் காலத்திலே சோலைகளிலும், மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும் பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்தவெளிகளிலும் இடர் உறாவண்ணம் மேய்க்க. பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும் பூசை செய்யாதவர்களும் காக்காத பாவிகளைத் தண்டியாத அரசனும், நரகத்தில் வீழ்வார்கள்.

ஈவுரிஞ்சுகல் நாட்டுதலும், சிவனுக்கும் ஆசாரியாருக்கும் பசுவைத் தானம் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைச் சிவசந்நிதிக்குத் தானம் செய்தலும், சிவனது திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும்புண்ணியங்களாம். பசுக்கள் தரும் பால், நெய், தயிர், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகௌவியங்களையும் சிவனுக்கு அபிடேகம் பண்ணுவிக்க.

பாலை இரண்டு மாசம் செல்லும் வரை கன்று பருகும் படிவிட்டு பின் கறந்து சிவனுக்கு அபிஷேகம் பண்ணுவிக்க. கன்று பாலுண்டு முலையை விடுத்த போது ஜலத்தினாலே முலையைக் கழுவிக்கறக்க. ஆசை மிகுதியினாலே கன்றுக்குப் பால் விடாமற் கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி, பின்பு பூமியிலே பிறந்து கடும் பசியினாலே வீடுகள் தோறும் இரப்பன். கபிலையின் பாலைச் சிவனுக்கே கொடுக்க. அதைத் தாம்பருகில் நரகத்துவீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின் எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்தில் வீழ்ந்து வருந்துவார்கள். அவர்களுக்குப் பரிகாரம் இல்லை.

பசுக்களைப் பகைவர் கவரின், எதிர்த்துக்காக்க. காத்தல் அரிதாய வழித்தம்முயிர் விடுத்தோர் சிவபதமடைவர். இது காறும் கூறியவற்றுக்கெல்லாம் பிரமாணம் சிவதருமோத்தரத்துக் கோபுரவியலின் இறுதியிற் காண்க.

நன்றி - பெரியபுராண சூசனம்
சண்டேசுர நாயனார் புராணம்.

உ
சிவமயம்

# பசு காக்கும் முறை

*சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்.*

பசுக்காத்தலின் பெருமையையும் காவாதொழிதலின் தீமையினையும் பற்றி வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி வந்தது நமது புண்ணிய பூமி. ஆனால் இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காப்பதும் காவாதொழிவதும் நிற்க அவற்றை உண்டிப்பொருட்டாக வதை செய்யாதிருத்தலே போதும். அதுவே பெரும் புண்ணிய மாகுமென்று சொல்லும் காலமாக உள்ளது.

இக்காலக் கொடுமை அந்தோ! பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதனின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்று நூல்கள் கூறுகின்றன. நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும் பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம் ஆறாகப்பெருகுமாயின் இந்நாடு என்ன அலங்கோலம் தான் படாது? இக்கொடிய பாவம் நமது புண்ணிய நாட்டில் வரத்தொடங்கிவிட்டது என்பது அறிவோர் துணிபாகும். பசுக்களிடம் கருணை இல்லாதவர்களும் பசுக்கொலை புரிவோரும் பசு இறைச்சி உண்போரும் ஆகிய பிறமதத்தினர், கொலைஞர், புலையர் முதலியோரிடம் பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது பெரும் பாதகம் ஆகும்.

விலைக்குப் பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு விற்றவனும் பொறுப்பாளியாவான் என்பது நூற்றுணிபும் உண்மையுமாம். நோய்ப்பசு, மூப்புடையபசு, இளைத்தபசு முதலியவற்றை விற்பதும், அதனால் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவம் ஆகும். அவற்றையும் பால்வற்றிய பசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக்காப்பாற்றுதல் கடமையாகும். தம்மால் இயலாத போது காக்கக்கூடியவர்களிடம் ஒப்புவித்தலே முறையாகும். மக்கள் இவற்றை அறிந்து திருந்த முயல்வார்களானால் நாட்டுக்கு நலமும் நமக்கு நன்மையும் தேடிக்கொண்டவராவர்.

நன்றி
சண்டேஸ்வரர் புராண விளக்கம்.


கோமாதா குலம் காப்போம்
பிள்ளைக்குப் பால் தருவாள்
மாதா
எல்லோர்க்கும் பால் தருவாள்
கோமாதா


கோமாதா குலம் காப்போம்
பால் தரும் தாயின் தசையை யாரும் உண்பார்களா?
பால் தரும் பசுவின் தசையை உண்ணலாமா?


கோமாதா குலம் காப்போம்
பசுவை வெட்டித்தின்றால் சிலருக்கு
ஒருநாள் உணவு கிடைக்கும்
பசு உயிர் வாழ்ந்தால்
வாழ்நாள் முழுவதும்
பால் உணவு தந்து எமைக் காக்கும்


கோமாதா குலம் காப்போம்
நாம் வணங்கும்
கோமாதாவையும் இடபங்களையும்
கொன்று தின்னலாமா?


கோமாதா குலம் காப்போம்
வண்டி இழுத்தும், வயல் உழுதும், சூடு மிதித்தும்,
எமக்காக உழைக்கும்
எருதுகளைக்
கொன்று தின்னலாமா?


கோமாதா குலம் காப்போம்
ஒரு மாடு குடும்பம் காக்கும் ஒன்பது மாடு குலம் காக்கும்

உ
சிவமயம்

# கோதனம்

*ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்*

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்....."
என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

"ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்......."
என்பர் அப்பர்.

"யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாயுறை....."
என்பர் திருமூலர்.

"தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம் ஆனினங்கள்.".

"தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும்
உரிமைச் சுரபிகள்"

"நீறு தரு மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம்"

"விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபி குலம்."

என்று பசுவின் பெருமையைச் சண்டேசுர நாயனார் கூறியதாகப் பெரியபுராணத்தில் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் கூறுவர்.

"காவலன் காவான் ஆயின் ஆபயன் குன்றும்"
என்று திருவள்ளுவரும்

"ஆன்பயன் இன்றாகும் காவலைவிடுப்பின்"
என்று விநாயக புராணத்தும் கூறுவார்.

முன்னாளில் இருபெரும் வேந்தர் போரிடக் கருதியபோது ஒருவர் மற்றவர் நாட்டில் வாழும் பசு முதலிய தீங்கு செய்யத் தகாதவற்றை அங்கு நின்று அகற்றுவதும், அங்ஙனம் செய்யமுடியாதவிடத்துப் பசுக்களைக் களவினால் தாம் கவர்ந்து காத்தலும் பண்டைய தமிழரின் பேரறம். அதனைப் புறநானூறு

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாதோரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்"

என முரசறைந்து இவர்களுக்குத் தீங்கு விளையாதவாறு பாதுகாப்பாக அப்புறப்படுத்தி விட்டே போர் செய்வர் எனக் குறிப்பிடும்.

இத்தகைய கோதனங்களைப் போற்றுதலும், ஆபயன் ஆகிய பஞ்சகௌவியங்களை அரனார்க்குத் திருமஞ்சனம் ஆட்டுவித்தலும் உயர்ந்த சிவபுண்ணியங்களாம்.

சைவசமயத்தின் கருவூலமான தேவாரத் திருமுறைகளில் பசுவின் பயன் பற்றி மூவர் முதலிகள் பாடிய பதிகங்கள் "கோதனத்திருமுறை" எனப்போற்றப்படுகின்றன.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

| | |
|---|---|
| "ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்!." | 1ஆந் திருமுறை |
| "அஞ்சாடு சென்னி அனலாடு கையன்!" | 2ஆந் திருமுறை |
| "ஆனிடை ஐந்து உகந்து ஆடினானை!" | 3ஆந் திருமுறை |
| "பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவார்!" | 3ஆந் திருமுறை |
| "ஆனஞ்சாடும்முடி அடிகள் வேடங்களே!" | 3ஆந் திருமுறை |
| "நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மென்னீரே!." | 1ஆந் திருமுறை |

எனப்பலவாறாகவும்,

### திருநாவுக்கரசு சுவாமிகள்

| | |
|---|---|
| "மாணிபால் கறந்தாட்டி வழிபட நீணுலகெலாம் ஆளக் கொடுத்தவன்!." | 5ஆந் திருமுறை |
| "பாலொடு நெய் தயிர் தேன் ஆடிகண்டாய்!.." | 6ஆந் திருமுறை |
| "ஆனிடை ஐந்தும் வைத்தார்!.." | 4ஆந் திருமுறை |
| "ஆனை ஆறென ஆடுகின்றான் முடி!.." | 5ஆந் திருமுறை |

"நெய்யதாடிய நீலக்குடியரன்!.." 5ஆந் திருமுறை
"கோதனத்தில் ஐந்து ஆடியை!." 5ஆந் திருமுறை
"ஆடும் ஆனைந்தும் உகப்பாய் போற்றி!." 6ஆந் திருமுறை
"பாலுநெய் முதலாமிக்க பசுவிலைந்தாடுவானே.." 4ஆந் திருமுறை
எனப்பலவாறாகவும்,

சுந்தரமூர்த்தி நாயனார்

"கோதனங்களின் பால்கறந்தாட்டி!.." 7ஆந் திருமுறை
"நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல்
பூசை செய்யலுற்றார்!." 7ஆந் திருமுறை

எனப்பலவாறாகவும் போற்றிப்பாடி வழிபட்டமையைத் திருமுறைகள் எமக்கு அறியத்தருகின்றன.

பசுவின் பயன்களாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவற்றைத் தரும் பசுவைப் போற்றி வழிபடல் கோபூசை செய்தல் உயர்ந்த சிவபுண்ணியமாம்.

நன்றி - "கோதனத்திருமுறை"
திருப்பனந்தாள் ஆதீனம்.

✪ ✪ ✪

## கோதான பலன்

கோதானம் செய்பவர் விஷ்ணு உலகம் செல்பவர். பசு பிரசவிக்கும் போது பசுவின் முகம் ஒரு புறமும், கன்றின் முகம் ஒரு புறமும் இருப்பதால் அதற்கு த்விமுகி எனப்படும். அச்சமயம் அதைத்தானம் செய்தால் கோதானம், பூதானம் செய்த இரண்டின் பலனையும் பெறலாம். அப்பசுவின் உடலில் எத்தனை ரோமங்கள் உள்ளனவோ அத்தனை ஆண்டு காலம் வரை பிரம்மலோகம் பெறுவான். பசுவின் கழுத்திலும் தலையிலும் சமஸ்த புண்ணியத் தீர்த்தங்கள் உள்ளனவாதலால் காலையில் எழுந்து பசுவின் கழுத்தை சொறிந்து விட்டு நமஸ்காரம் செய்தால் 30 வருடம் செய்த பாவம் அகலும். பசியுள்ள பசுவுக்கு புல்லும் நீரும் அளித்தால் கோமேதக பலனைப் பெறலாம். ஒவ்வொரு நாளும் காலையில் கன்றுடன் கூடிய பசுவை விதிப்படி பூஜித்துவர சற்புத்திரர்களோடு சகல சம்பத்துக்களும் பெற்று நீடு வாழலாம்.

நன்றி - ஜிந்துப்பிட்டி முருகன்
கும்பாபிஷேக மலர்

உ
சிவமயம்

# கபில பூசை

*அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்*

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள் நந்தை கபில நிறமும், பத்திரை கருநிறமும், சுரபி புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம்.

சிவபூசாந்தரத்தில் பசுவைப்பூசித்தல் வேண்டும். பசுவை அருக்கியசலத்தினால் புரோட்சித்து

ஓம் கபிலா நந்தாயை நம
ஓம் கபிலா பத்திராயை நம
ஓம் கபிலா சுரபயே நம
ஓம் கபிலா சுசீலயை நம
ஓம் கபிலா சுமனாயை நம

என்று பூசித்து அருக்கியங் கொடுத்து, சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அருச்சித்து, அன்னமும் சலமும் ஊட்டி, தூபதீபங்காட்டி.

"நின்மலராகிய சிவபெருமான் ஆன்மாக்களிடத்திற் கொண்ட பெருங்கருணையினாலே அவர்கள் செய்த பாவத்தை நீக்கி மோட்சத்தை அடையும் பொருட்டு தேவர்கள் அமிர்தம் பெற விரும்பி, பாற்கடல் கடைந்த காலத்தில் அக்கடலிற் தோன்றி, ஆன்மாக்களுடைய துன்பத்தைப் போக்கும் பயோதரத்தையுடைய மாதாவே, யான் தருகின்ற புல்லை ஏற்றுக் கொள்க" என்னும் கருத்தமைந்த மந்திரத்தைச் சொல்லிப் புல்லை அருத்துக, பின்பு வலமாக வந்து நமஸ்காரம் செய்க.

நன்றி - சிவபூசை விளக்கம்.

உ

சிவமயம்

## மணிமேகலை தரும் செய்தி:

# 'நோவன செய்யன்மின்'

தாயினால் கைவிடப்பட்ட குழந்தையொன்று அழும் ஒலியைக் கேட்டு ஒரு பசு அங்குவந்து சேர்ந்து, அக்குழந்தையின் பசித்துன்பம் நீக்க, நாவால் நக்கி தன்பால் ஊட்டி, ஏழுநாள்வரை அக்குழந்தையை விட்டு நீங்காது பாதுகாக்க, பூதியென்னும் அந்தணன் அக்குழந்தையைக் கண்டு எடுத்து ஆபுத்திரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான்.

ஒருநாள் யாகத்தில் ஆகுதியாக வெட்டிப்போடுவதற்காக அந்தணர்கள் யாகசாலையில் ஒரு பசுவைக் கட்டி வைத்திருப்பதையும், அப்பசு ஏங்கி அலறுவதையும் ஆபுத்திரன் கண்டான். அப்பசுவுக்கிரங்கி அன்றிரவே அப்பசுவைக் கவர்ந்து காட்டிடைக் கொண்டு சென்றான். அப்பசுவைத் தேடிச் சென்ற அந்தணர்கள் அவனைப்பிடித்து அடித்தனர். அவ்வேளை யாகத்திற்குத் தலமைதாங்கிய அந்தணனை அப்பசு கொம்பால் குத்திக்கிழித்துக் கொன்றுவிட்டுக் காட்டில் பாய்ந்துவிட்டது.

ஆபுத்திரன் அந்தணர்களைப் பார்த்து 'பசுவை வருத்தாதீர்கள்' நான் சொல்வதைக் கேளுங்கள் "அரசனால் விடப்பட்ட மேய்புலத்தில், தானாகவே உண்டாகிய புற்களையுண்டு, நாம் பிறந்த நாள் முதல், சிறப்புடையதாகிய இனிய பாலை, அருள்பொருந்திய உள்ளத்தோடும், அருள்மிகுந்து உண்பிக்கும் பசுவை வருந்தச் செய்யலாமா? இப்பசுவுடன் உமக்குண்டாகிய சினம் யாது?" என வினவினார்.

"நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்
விடுதலை மருங்கின் படுபுல்லார்ந்து
நெடுநிலை மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந்தூட்டும்
இதனொடுவந்த செற்றம் என்னை?"

நன்றி - மணிமேகலை
ஆபுத்திரன்திறம் அறிவித்தகாதை

✪ ✪ ✪

உ
சிவமயம்

# உணவும் மருந்தும்

## *உபகரிக்கும் பசுக்குலம்*

பசுவிலிருந்து பெறப்படும் பாலும் பாற் பொருட்களும் மனிதருக்குப் பூரணசத்துணவாகப் பயன்படுதல் யாவரும் அறிந்த உண்மை. இவை உணவாக மட்டுமன்றி மருந்தாகவும் பயன்படும் சிறப்பினைச் சித்தவைத்திய நூல்களில் இருந்து அறிய முடிகின்றது.

பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், சாணம், சலம், கோரோசனை முதலானவை எமது உடலுக்கு வரும் நோய்களைத் தீர்க்கும் மருந்தாக நம்முன்னோர்களால் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உணவாகவும் மருந்தாகவும் எமக்கு உதவும் பசுக்குலத்திற்கு ஈடானது இவ்வுலகில் எதுவுமில்லை.

வைத்திய வித்வமணி சி. கண்ணுச்சாமிப்பிள்ளை என்பவரின் "சித்தவைத்திய பதார்த்தகுணவிளக்கம்" (Materia Medica) எனும் நூலிலிருந்து இத்தகவல்களை அறியமுடிகிறது.

### 01. கோரோசனை (Dezoar)

கோரோசனை பசுவின் வயிற்றில் உள்ள பித்தப்பையில் உருவாவது. முதிர்ந்த பசு இறந்தபின் அதிலிருந்து பெறப்படுவது. பசுவைக்கொலை செய்து எடுக்கப்படும் கோரோசனை பூரணத்துவமானதாகாது.

கோரோசனைக்கு மேகநீர், மேகவெட்டை, பித்தகோபம், உன்மாதம், சிசுக்களுக்கு உண்டாகின்ற கணமாந்தம் முதலிய ரோகங்கள், சிலேஸ்மாதிக்கம், மசூரியைப்புண் இவைகள் நீங்கும்.

*நீரிழிவு மேகசுர நீங்காக் கனல்வேகங்*
*கூறியவுன் மாதங் குழந்தைகணோய் - பாரகபம்*
*வீறுமசூரியும் போம் வேதந் தனிலிரண்டாய்க்*
*கூறுங்கோ ரோசனை கட்கு.*

கோரோசனை மாத்திரை :

தோஷம், சுரம், சந்நி, தொண்டைக்கட்டு என்பவற்றைப் போக்கும்.

கோரோசனைச் சூரணம் :

சுரம், வீக்கம், மாந்தம், வயிற்றுப்பொருமல், பெருவயிறு ஆகிய நோய்களை மாற்றும்.

## 02. பசுவின் பால் (Cow's Milk)

பசுவின் பால் பூரணசத்துள்ள உணவாகும். இது பாலருக்கும் விருத்தருக்கும், புராணசுரம், சூலை, பிரமேகம், துர்ப்பலம், அதிசுஷ்கரோகம், ஆகியவைகளை உடையவர்ளுக்கும் ஆகும்.

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணாளி
சூலையர் மேகத்தோர் துர்ப்பலத்தோர் ஏழுமிவர்
எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

## 03. பசுவின் தயிர் (Cow's Curd)

பசுவின் தயிரால் பசியுண்டாகும். இசிவு, சீரணரோகம், தாகம், ஆயாசம், காசம், சரீரஎரிச்சல் என்பன நீங்கும்.

## 04. பசுவின் மோர் (Cow's Butter Milk)

பசுவின் மோருக்கு, வீக்கம், மகோதரம், வயிற்றுவலி, பாண்டுரோகம், பித்தகோபம், இடுமருந்தால் வரும் நோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம், தாகம் ஆகியவைகள் போம்.

வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்
தாக்குமருந் திட்டததி சாரமொடு - கூக்குரலே
மாறாத் திரிதோஷமந்தமனற் றாகம்போம்
வீறாவின் மோருக்கு மெய்.

## 05. பசுவின் வெண்ணெய் (Cow's Butter)

பசுவின் வெண்ணெய்க்குக் கண்ணோய், கண்ணெரிச்சல், பீளைசாரல், பிரமேகரோகம் இவை போம். தீபாக்கினியுண்டாம். (பசி உண்டாகும்)

கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீளையும்போ
மெண்ணும் பசியு மெழுப்புங்காண் - நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் ககலும்வண் மேகமெல்லாம்
பூவினர்க் கெல்லாம் புகல்.

## 06. பசுவின் நெய் (Cow's Ghee)

பசுவினது நெய்யானது தாகம், உழலைப்பிணி, அதிசுட்கரோகம், வாந்தி, பித்தாதிக்கம், வாதவிஷமம், விரணப்பிரமேகம், வறிற்றிலெரிவு, பித்தவிக்கல், இருமல், வயிற்றுவலி, சினைப்பு, குடல்நெளிதல், எலும்புருக்கி பலமூலரோகம் ஆகியவைகளை நீக்கும்.

தாக முழலைசுட்கஞ் சத்திபித்தம் தாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல் - மாகாசங்
குன்மம் வறட்சி குடற்புரட்ட லஸ்திசுட்கஞ்
சொன்மூலம் போக்குநிரைத் துப்பு (துப்பு நெய்)

## 07. பசுவின் சாணம் (Cow's Dung)

பசுவின் சாணம், கல் முதலியவைகளால் அடிபட்ட வீக்கம், ஒழுகுகின்ற உதிரம், கிருமிரோகம், கபசுரதாகம் இவைகளை நீக்கும். தேகசுத்தி உண்டாகும்.

அடிபட்ட இடங்களில் பசுவின் சாணத்தைச் சலம்விட்டுக் கரைத்துக் கொதிக்கவைத்துத் தாங்கக்கூடிய சூட்டில் மேற்பற்றுப்போட விரைவில் வீக்கம் கரையும், நோய் தணியும்.

ஆவினது சாண மடிபடுவீக் கம்முதிரந்
தாவி வருகிருமி சார்ந்தகப மேவுசுரந்
தாங்குந்தா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியபால்
தெங்கின்பா லுக்கொக்குந் தேர்.

## 08. பசுவின் சலம் (Cow's Urine)

கோசலத்தால் விஷபாண்டு, சோபை, பற்பலவீக்கம், சகலவிஷம், அசிர்க்குகாமாலை, பன்னோய் முதலிய பிணிகள் நீங்கும்.

விடபாண்டு சோபை பல வீக்கஞ் சகல
விடமுதிர மாலையென மெத்தப் - படவிதனிற்
பேசலக்க ணோடுதந்தப் பீடையும் நின்றிடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு.

## 09. பஞ்ச கௌவியம்

பசுவின் சாணம், பால், தயிர், நெய், சலம் இவைகளைக் கூட்டிப் பஞ்சகௌவியமாக்கிச் சிலவேளை உட்கொள்ளும் பொருட்டு ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இதனால் தேகத்திலுள்ள மாசுக்கள் நீங்கிச் சுத்திபெறும் என்பது கருத்து.

இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகரம் - பதார்த்த சூடாமணி -1927 என்னும் நூலிலிருந்தும் இவ்வுண்மைகளை அறியமுடிகிறது.

தகவல் தந்தவர்:
***வைத்தியகலாநிதி செ. து. சண்முகராசா அவர்கள்***
இளவாலை

✪ ✪ ✪

உ
சிவமயம்

# பசுவின் பெறுமதி என்ன?

இந்துசமய இலக்கியமான வேதங்கள் முதலாக வடமொழி, தமிழ் ஆகியவற்றிலுள்ள இலக்கியங்கள் வரை ஒரே முகமாக பசுவைப் பெருமைப்படுத்தி உள்ளதைக் காணலாம்.

பசுவைப் பெருமைப் படுத்திக் கூறும் மஹாபாரதக் கதை இது.

சயவனர் ஒரு மகரிஷி. 12 ஆண்டுகள் நீரில் வாசம் செய்து தவமியற்றினார். அவரது உடலைச்சுற்றி எல்லாப்புறமும் மீன்கள் கூட்டமாகத் தொற்றிக் கொண்டிருந்தன. மீன்பிடிக்கவந்த செம்படவனது வலையில் முனிவர் மீன்களுடன் சிக்கிவிட்டார். பல மீனவர்களின் உதவியோடு கரைக்கு வலையில் அகப்பட்டவற்றைக் கொண்டுவந்தான் செம்படவன். இச் செயலின் போது வெகுவாரியான மீன்கள் இறந்தும் விட்டன.

வலையில் முனிவர் இருப்பதைக் கண்ட செம்படவன் பயந்து போனான். முனிவரும் கண்விழித்து நாற்புறமும் பார்த்தார். மீன்கள் இறந்திருக்கக்கண்டு கண்கலங்கி வருந்தினார். செம்படவன் பயத்துடன் "சுவாமி! அறியாத்தனமாக தங்களை நான் வலைவீசிப் பிடித்துவிட்டேன். மன்னிக்க வேண்டும் தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்." என்று கூறினான்.

அதற்கு முனிவர் என்னையும் மீன்களுடன் உன் உடமையாக்கிவிட்டதால், மீன்களை விற்பது போல் என்னையும் ஒருவருக்கு விற்றால் தான் நான் விடுதலைபெற முடியும். எனவே என்னையும் விற்றுவிடு என்று கூறினார்.

செம்படவன் முனிவரை விற்பதாவது? யார் வாங்குவார்கள்? என எண்ணித் திகைத்தான். இறுதியாக அந்நாட்டு மன்னனான நகுஷன் என்பவரிடம் போய் விபரத்தைக் கூறினான். நகுஷனும் சிறிதும் தாமதியாது உரியபடி சென்று முனிவரை வணங்கி உபசரித்தான். அவரின் விருப்பத்தை வினவி. அறிந்த அரசனும் ஒருகணம் திகைத்து விட்டான். பிறகு 1000 பொன்களைக் கொடுத்து முனிவரை வாங்குவதாகத் தெரிவித்தான்.

முனிவர் அதைக்கேட்டு நான் ஆயிரம் பொன்தான் பெறுவேனோ? சரியாக என்பெறுமதியைத் தீர்மானித்துச்செய் என உரைத்தார். மன்னன் 10000 பொன்கள் கொடுப்பதாகக் கூறினான். முனிவர் அதற்கும் மறுத்து, தன் பெறுமதியை சரியாக நிர்ணயிக்கும்படி கோரினார். இவ்விதம் 1 லட்சம் பொன்கள், இராஜ்யத்தில் பாதி எனப் படிப்படியாக பெறுமதியை உயர்த்திச் சொல்லிக் கொண்டு போக எல்லாவற்றையும் சரியில்லை என முனிவர் தள்ளிவிட்டு உன் அமைச்சர்களையும் புரோகிதர்களையும் கலந்தாலோசித்து சரியான பெறுமதியைக் கொடுத்து வாங்கும்படி கூறினார். நகுஷன் செய்வதறியாது கலக்கமுற்றார்.

அவ்வேளை அவரது மதிப்பைப் பெற்ற "கவிஜாதர்" என்ற முனிவர் மன்னனுக்கு இரகசியமாக "கன்றுடன் கூடிய பசுவைக் கொண்டு வந்து முனிவரின் பெறுமதியாகக் கொடுத்து விடுங்கள். அது தான் பொருத்தம்" என்றுரைத்தார். மன்னனும் அப்படியே பசுவைக் கொணர்ந்து இவற்றையே உங்களுக்குரிய பெறுமதியாக நான் கருதுகிறேன். இதைக் கொடுத்துத் தங்களை விடுவிக்கிறேன் என்றான்.

இதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்த சயவனர் மன்னனை நோக்கி "எல்லையில்லாத பெறுமதியுடைய பசுவை எனக்கு ஈடாகக் கொடுத்துள்ளாய். பசுவுக்கு, அதுவும் கன்றுடன் கூடியதாக இருக்க, உலகில் ஒப்பான பொருள் எங்குமே கிடையாது. உனக்கு எல்லா நலன்களும் உண்டாவதாக" என வாழ்த்தித் தன்னை மீட்டுச் சென்றார்.

நன்றி - ஞானக்கதிர்
1989 புரட்டாதி இதழ்.

## ஆவுரிஞ்சு கல்

நமது முன்னோர்கள் பசுக்கள் கூடுகின்ற இடங்களில் அவை தாகம் திர்ப்பதற்கு வசதியாகத் தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டி எந்நேரமும் நீர் நிரம்பி இருக்க வகைசெய்தார்கள். அவற்றின் பக்கத்தில் பசுக்கள் தமது உடலில் ஈக்கள் முதலியவற்றால் உண்டாகும் தினவுதீர உடலை உரோஞ்சு வதற்கு வசதியாக. உருண்டையான உயரமான கற்களை நட்டுவைத்தார்கள். பசுவைக் காக்க உணவும் நீரும் மட்டுமன்றி ஆ உரிஞ்சு கல்லும் நட்டுவைத்த முன்னோரின் தர்ம சிந்தையை என்னவென்பது.

உ
சிவமயம்

# தைத்திருநாள் பட்டிப்பொங்கல் செய்தி

## *பசுக்கள் இடபங்கள் பாதுகாக்கப்படப் பிரார்த்திப்போம்*

"தெய்வீகமான, பயன்மிகுந்த பசுக்களையும், இடபங்களையும் குறைதீர்த்து அவற்றைத் தெய்வமாகப் பூஜித்துப் பாதுகாத்து, அன்னமும் பாலுமுண்டு நல்வாழ்வு வாழ்ந்து செழிப்பும், சிறப்பும் பெற்ற தமிழர் தம் உயிரோடும் உடலோடும் ஒன்றித்த மரபு நீங்கி, பசுவதை செய்து பசுமாமிசம் புசிக்கும் கொடிய மதிகெட்ட பழக்கம்" அகன்றிடல் வேண்டும். நாட்டின் துன்பதுயரங்கள் அழிவுகள் நலிவுகள் நீங்க ஆனிரைக்காப்பரண்கள் அமைத்து கோபூசை செய்வித்து, பசுவின் கன்றுக்காக தன்மகனை தேர்ச்சில்லில் சிரச்சேதம் செய்வித்து ஆனிரைகளின் குறையிரந்து தீர்த்து அவற்றைப் பேணிய செங்கோலும் சிவநெறியும் குன்றாத தமிழ் மாமன்னர்களது மரபு நீங்கி, ஆனிரைகளை அறுப்பித்து, ஆனிரைகளுக்கு சிவபூமியில் கொல்களங்கள் அமைத்துக் கொடுத்து ஆனிரைகளை கொடுமைப்படுத்தி அழிவு செய்து வருமானம் பெற்று அரசோச்சும் மகா கொடிய பாதகச் செயல்கள் நீங்க வேண்டும்.

* பசுவதை மகாகொடிய பாவமான செயலாகும்.

* பசு மாமிசம் புசிப்பதும் மகா கொடிய பாவமான செயலாகும்.

* பசுவதைக்கு அனுமதியளிக்கும் அரசனுக்கும் கொடிய பாவம் சேரும்.

* பசுக்களை தகாதவன் கையில் விற்றலும் கொடுத்தலும் கொடிய பாவமாகும். பசுவதை நிகழப் பேசாமல் எமக்கேன் எனப் பார்த்திருப்பதும் பாவமான செயலாகும். இவை மகாகொடிய எரிவாயில் நரகத்தையே நமக்குப் பெற்றுத் தரும் என்பது தெய்வ நியதியாகும்.

நன்றி - தர்மதீபம்
**தவத்திரு ப. சிவலோகநாதன்**
செயலாளர்
வடபிராந்திய இந்துப்பேரவை
14.01.2001.

உ
சிவமயம்

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

***பண்டிதர் வ. பேரின்பநாயகம்***

சைவ உலகிற் கலங்கரை விளக்காக விளங்குகின்றவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவர் பிரசாரங்களிலும் நூல் உரைகளிலும் மேற்கோள் காட்டும் இடங்களில் பெரும்பாலும் சிவத்தருமோத்தரம் என்ற நூலின் பாடல்களையே கையாண்டிருக்கிறார். சைவாகம மொழி பெயர்ப்பாகிய சிவதருமோத்தரத்தின் பன்னிரண்டு இயல்களில் 228 பாடல்கள் கொண்ட கோபுரவியல் மகுடமாக விளங்குகின்றது.

பசுக்கள் வாழும் இடத்தின் இயல்பு என்ற பொருளில் கோபுர இயல் என்ற தொடர் கையாளப்பட்டிருக்கின்றது. பெண்கள் இருக்கும் இடம் அந்தப்புரம் என்று சொல்லப்படுதல் போலக் கோ (பசு) தங்குமிடம் கோபுரம் எனப்படுகிறது. (கோ - பசு, புரம் - இடம்) ஆலயங்களில் மட்டுமல்லாது, இல்லங் களிலேயும் கோபுரம் அமைக்கும் விதி மிக விளக்கமாகச் சிவத்தருமோத்தர கோபுரவியலிற் கூறப்பட்டிருக்கிறது.

*"சாலை யானினந் தங்கச் சமைத்தவர்*
*கால காலன் புரத்தைக் கலப்பர்தா*
*மேல வேண்டிய யாவையு மின்புறும்*
*வேலை வெங்கதி ரோற்கும் விதித்ததே"*

என்பது சிவதருமோத்தர கோபுரவியல் 148ஆவது பாடலாகும்.

பசுவினம் வசிக்கக் கொட்டில் கட்டிப் பாதுகாத்தவர்கள் பெறும் சிவபுரம் சேர்தல் ஆகிய பயனை இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது. பசுக்களைத் துன்புறுத்தியவர் அனுபவிக்க வேண்டிய துன்பங்களும் இந்த இயலிற் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோராலும் செய்யக்கூடிய புண்ணியம் பசு ஓம்புதல். "யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை" என்பர் திருமூலர்.

தூலலிங்கமாக ஆலய வாசலிற் காணப்படுவது கோபுரம். தேவர்கள் வீற்றிருக்குமிடமாகக் கோபுரம் விளங்குகிறது. உலகில் நிகழுகின்ற விழாக்களைக் காணவருகின்ற தேவர்கள் அவ்விடங்களிலே அலங்காரமாகத் தூக்கப்பெற்ற தோரணங் களில் வீற்றிருப்பர் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆலயங்களிலும், கோபுரங்களிலும், தோரணங்களிலும் வீற்றிருந்தருள்கின்ற சகல தெய்வங்களும் தேவர்களும் பசுக்களின் உறுப்புக்களில் வீற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோபுரதரிசனத்தால் வருகின்ற புண்ணியம் பசுவின் தரிசனத்தாலும் கிடைக்கும் என்பது உண்மை.

✪ ✪ ✪

**கோமாதா சிவகுலமாதா**

ஓமாம் அட்சரத் தோங்கிய வேதம்
பூமா ரிகொடு போற்றிடும் தெய்வம்
ஓமாக் கினிபுகழ் உயர்த்திடும் தெய்வம்
கோமா தாவைக் கும்பிட்டு வாழ்வோம்.

**பசுவின் புலம்பல்**

சைவரென்று பேசிடுவார் என்னாசை மகனே இங்கே
சமயநெறி தவறிவிட்டார் என்னாசை மகனே
கையணைத்துப் பாலெடுத்தார் என்னாசை மகனே எம்மைக்
கடவுளென்று பொங்கலிட்டார் என்னாசை மகனே.

ஆண்டுக்கொரு கன்றாகப் பெற்றெடுத்தேன் நித்தம்
அன்பாக மடி சுரந்து பால் கொடுத்தேனே
வேண்டுமட்டும் எங்கள் பட்டிபெருகச் செய்தேனே வயல்
விளைபயிர்கள் செழுமைபெற எருவும் தந்தேனே.

வேளாளர் கலப்பையிலே உனதுதந்தையார்
வியர்வை சிந்த உழுதுழுது விளைவுகொடுத்தார்
பாழான நிலமெல்லாம் பயிர்நில மாக்கிப்
பாடுபட்டுப் பணம் பெருகும் பயனுண் டாக்கினார்.

காய்ச்ச லென்றால் காலவுத்தால் ஆறுதலில்லை
கழுத்திடையே புண்ணிருந்தால் ஆறுதலில்லை
நோய்ச்சுமையைக் காட்டாமல் மேற்சுமைகொண்டு
நுகமிழுத்தே உடலிளைத்தார் உன்தகப்பனார்.

நன்றி - பசுவின் புலம்பல்
*அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்*

உ
சிவமயம்

# வாழிய ஆனினம்

*கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை*
(ஓய்வுபெற்ற அதிபர், கொழும்பு)

வாழிய ஆனினம் வழுத்திடு தெய்வமாய்
வாழிய ஆனினம் வளம் நிறை நிதியமாய்
வாழிய ஆனினம் வாழ்வுநேர் அமுதமாய்
வாழிய ஆனினம் வையகம் வாழவே.

ஆவினைப் பிள்ளையாய் அணைத்துக் கொள்ளுவோம்
ஆவினைப் போற்றியே அமைதி காணுவோம்
ஆவினை அணைத்துப்பால் அமுதை உண்ணுவோம்
ஆவினை ஆணைத்தகத் தழகு காணுவோம்

மங்கல வாழ்வினை மகிழ்வோடேற்பவர்
செங்கமலத்துச் சேய் செல்வி ஆகியெ
அங்கிருந் தருட்டிரு ஆவை நோக்குவர்
பொங்கிடம் வாழ்வினிற் புனிதம் பொலியவே.

புகலியர் கோன்புகழ் புனித ஆதரு
மிகவுயர் பாலினை மேன்மைத் தயிரினை
சகம்விழை சாணியைச் சலத்தை நெய்யினை
சுகந்தரு மருந்தெனச் சொல்வர் தூயரே

மந்திரமாவதும் மதியைத் தருவதும்
சிந்தனைத் திரளிடைத் தேற்ற மளிப்பதும்
வந்தனைக் குரிதாம் வளமார் நீற்றினைத்
தந்த ஆ சாணத்தா லாமென வாழ்த்துவோம்.

✪ ✪ ✪

உ
சிவமயம்

# பசுவதை சட்டத்தை எதிர்த்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்

பசு மற்றும் எருமை மாடுகளை இறைச்சிக்காக கொல்லலாம் என்ற விவசாய அமைச்சின் புதிய சட்டத் திருத்தத்தை எதிர்த்தும் இச்சட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரியும் கண்டியில் பௌத்த பிக்குமார் தலைமையில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

கண்டி பௌத்த சங்க கட்டிடத்திற்கு முன்னால் நடைபெற்ற இம்மறியல் போராட்டத்தில் "அம்மாவைக் கொல்லாதே. பால் கொடுக்கும் பசுவைக் கொல்லாதே, விவசாய மக்களின் தாயைக் கொல்லாதே, மாட்டிறைச்சி உண்ணாதே", "பசுவைக் கொல்லலாம் என்ற புதிய சட்டத்தை இரத்துச் செய்" ஆகிய சுலோக அட்டைகளுடன் கோஷமிட்டவாறு பௌத்த பிக்குகளும் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டி அஹிம்சா சங்கத்தினரால் நடத்தப்பட்ட இம்மறியல் போராட்டம் இச்சங்கத்தின் தலைவரும் கண்டி மாநகரசபை உறுப்பினருமான வண. உடவத்தகலே நந்தா சுவாமிகளின் தலைமையில் நடைபெற்றது.

10-06-1983ஆம் அண்டு காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானால் கொண்டுவரப்பட்டுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பசுக்களையும், எருமைப் பசுக்களையும் இறைச்சிக்காக கொல்வதை தடைசெய்யும் சட்டத்தை நீக்கி இவற்றை இறைச்சிக்காகக் கொல்லலாம் என்று 1958ஆம் ஆண்டில் இருந்த சரத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும் திட்டம் விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவினால் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்றும் தாய்க்கு நிகராகத் திகழும் பசுக்களைக் கொல்ல இடமளிக்கக் கூடாதென்றும் உடவத்துகல நந்தசுவாமிகள் இம்மறியல் போராட்டத்தினர்களிடையே பேசுகையில் கூறினார்.

நன்றி - வீரகேசரி

உ
சிவமயம்

# கோ ஸம்ரக்ஷணம் லோக ஸம்ரக்ஷணம்

* *கோ மாதா நம் குல மாதா*
* *வீட்டிற்கு ஒரு பசு வளர்ப்போம். ஊருக்கு ஒரு கோசாலை அமைப்போம்.*
* *பசுவின் ரத்தம் பூமியில் விழுந்தால் பாவம் சேரும்.*
* *தாய்ப் பாலுக்கு அடுத்தது பசுவின் பால். பால் நின்றால் தாயை விற்பதில்லை. அதேபோல் கறக்காத பசுவை விற்காதீர்கள்.*
* *கறக்காத மாடுகளைக் கொல்லாதீர், அது பெற்ற தாயை கொல்வதற்குச் சமம்.*
* *பசுவின்பால், தயிர், நெய், சிறுநீர். சாணம் சேர்ந்தது பஞ்சகவ்யம்.*
* *பஞ்சகவ்யம் எல்லா வியாதிகளையும் போக்க வல்லது.*

பஞ்சகவ்யத்திலிருந்து பூஜைப் பொருட்களான விபூதி, தூபம், உடல் உபயோகப் பொருட்களான குளியல் சோப், பற்பொடி, ஸ்நானப்பொடி, ஷாம்பு, மருந்துப் பொருட்களான மூட்டுவலி, பக்கவாதத்திற்கு தைலம், சொறி, சிரங்கு, தொழுநோய்களுக்கு மாத்திரை, வெண் குஷ்டத்திற்கான மாத்திரை மற்றும் களிம்பு, டானிக், நோய் எதிர்ப்பு சக்திக்கான மாத்திரை போன்ற ஏராளமான மருந்துகள் தயாராகின்றது.

உரவகைகளான மண்புழு, இயற்கை உரம், நாடேப் கம்போஸ்ட், பூச்சிக்கொல்லி மருந்து, பயிர் ஊக்கி ஆகியனவும் தயாரிக்கப்படுகிறது.

## கோமாதா தயாரிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 01. Malish Thel (Oil) | - | மூட்டுவலி மற்றும் சதைப்பிடிப்பிற்கு மேல் பூச்சிற்கான தைலம் |
| 02. Upatun (Powder) | - | முகப்பரு, வெண்புள்ளி, செம்படை நீங்க, பொடுகு, முடி உதிர்வதை தடுக்க |
| 03. Ganvati (Tablets) | - | நோய் எதிர்ப்பு மற்றும் நீரிழிவு வியாதிக்கு |
| 04. Tooth Powder | - | பல் ஈறுகள் பலம் பெற |


| | | |
|---|---|---|
| 05. Tonic | - | உடல் வலுப்பெற நோய் எதிர்ப்புச் சக்திக்கும் |
| 06. Pancha Gaviya Gruth | | நாள்பட்ட காய்ச்சல், மூளைக்கோளாறு, பக்கவாதத்திற்கு. |
| 07. Gruth (Tablets) | - | நாள்பட்டகாய்ச்சல், மூளைக்கோளாறு, பக்கவாதத்திற்கு. |
| 08. Doop | - | சுற்றுச்சூழல் தூய்மையாக (புகையும் பொழுது யாகப் புகை மணம்) |
| 09. Vibuthi (விபூதி) | - | பசுஞ்சாணத்தினால் முறைப்படி தயாரிக்கப் பட்டது. |
| 10. Shwitranashak Vati | - | வெண்படை, வெண்குஷ்டம் நீங்க (உண்பதற்கு) |
| 11. Shwitranashak Lep | - | வெண்படை, வெண்குஷ்டம் நீங்க (வெளிப்பூச்சிற்கு) |
| 12. Shampoo | - | முடி உதிர்தல், இளநரை, பொடுகு நீங்க |
| 13. Soap | - | செம்புள்ளி நீங்க, உடல் பளபளப்பிற்கு, தோல் வியாதிகளுக்கு |
| 14. Eczema Soap | - | அனைத்து தோல் வியாதிகளுக்கும் |
| 15. Harde Churan | - | அஜீரணம், வாயு தொந்தரவு முதலிய வயிற்று நோய் நீங்க |
| 16. Bal Pal Ras | - | 15வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பலத்திற்கும் நோய் எதிர்ப்புச் சக்திக்கும் |
| 17. Shir Dardh Nasak | - | ஒற்றைத்தலைவலி நீங்க |
| 18. Keet Niyantarac | - | செடிகளில் உள்ள பூச்சிகளை விரட்ட, செடி நன்கு வளர |
| 19. Vermicompost | - | (மண்புழு உரம்) சிறந்த இயற்கை உயிர் உரம் |
| 20. Nadep Compost | - | குறைந்த சாணத்தில் நிறைந்த கம்போஸ்ட் உரம் |

நன்றி

கோ ஸம்ரஷணா டிரஸ்ட்
பசு பாதுகாப்பு இல்லம்
26, மேட்டுமாரியம்மன் தெரு,
சேலம், இந்தியா - 636001

உ
சிவமயம்

# பசுவின் குரல்



காருண்யம் மிக்க மனிதர்களே!

உங்களுக்கு,
வாழ்நாள் முழுவதும் பால் தருகிறேன்
என்னைக் கொல்லாதீரகள்.

நீங்கள் கழித்துவிடும்
புல், தவிடு, வைக்கோல், கழுநீர்.
இலை, குழைகளை உண்டு
உங்களுக்குச் சத்துள்ள பால் தருகிறேன்
என்னைக் கொல்லாதீர்கள்.

உங்களுக்குச்
சத்துணவான பால், தயிர், நெய் தந்து
உங்கள் பயிர்களுக்குப் பசளையும் தருகிறேன்
என்னைக் கொல்லாதீர்கள்.

குழந்தைகளுக்குப்
பாலூட்டும் தாயின் தசையை வெட்டித் தின்பார்களா?
உங்களுக்குப்
பால்தரும் என்தசையை நீங்கள் தின்னலாமா?

மனிதர்களே!
உங்களுக்கு உணவாகப் பால் தந்து
உங்கள் உணவுப்பயிர் வளர்க்க
உரமாகச் சாணமும், உழைப்பும் தந்து
உங்களுக்காகவே நாம் வாழ்கின்றோம்
எங்கள் இனத்தைக் கொல்லாதீர்கள்.

எங்களை வெட்டித் தின்றால்
ஒருநாள் மட்டும் ஒருசிலருக்கு உணவு கிடைக்கும்
நாங்கள் உயிர்வாழ்ந்தால்
வாழும் நாள் முழுதும் பால் உணவு தருவோம்
எங்களைக் கொல்லாதீர்கள்

நாங்கள் தாவரங்களில் இருந்துதானே சத்துணவைப் பெறுகின்றோம் உடற்பலமும் பெறுகிறோம்.
நீங்களும் அவ்விதம் பெறலாமே, நாங்கள் பாலும் தருவோம் எங்களைக் கொல்லாதீர்கள்.
அம்மா குழந்தைக்குத் தானே பால் தருவார்
நான் எல்லோருக்கும் பால் தருகின்றேன்
என்னைக் கொல்லாதீர்கள்.

பாலர்முதல் வயோதியர்வரை உயிர்வாழ்வதற்குரிய
அமுதமான பாலைத் தருகிறேன்
என்னைக் கொல்லாதீர்கள்.

எமது பாலில் நீங்கள் வளர்கிறீர்கள்
உங்கள் வயல்களுக்குப் பசளை தருகிறோம்
எருதுகள் வண்டி இழுத்து, வயல் உழுது
உங்களுக்காக உழைக்கின்றனர்
எங்களை கொல்லாதீர்கள்.

✪ ✪ ✪

## கோமாதா பொன்மொழிகள்

01. இல்லத்துக்கொரு பசு வளர்த்திடுவோம்,
 இல்லில் மகாலட்சுமி இனிதுறைவாள்.

02. கோபூசை செய்து கும்பிடுவோம்
 பாவமகன்றிட இன்புறுவோம்.

03. பசுவில்லா வீடு பாழ். பசுவுள்ள வீட்டில் வாழ்

04. பசுவில்லா நாடு பாழடைந்த காடு.

05. கோதானம் செய்திடுவோம்
 குன்றாப் புண்ணியப் பேறடைவோம்.

06. தன்பிள்ளைக்குப் பால் தருவாள் மாதா.
 எல்லார்க்கும் பால் தருவாள் கோமாதா.

07. எல்லாச் சத்தும் நிறைந்த பாலை
 எல்லோருக்கும் தருவது பசுவன்றோ.

08. எல்லாத் தேவரும் இருக்கும் திருவுரு
நல்ல பசுவை நாம் தொழுவோமே.

09. சுபகாரியங்கள் தொடங்கும் போது
பசுவைப் பார்த்தால் நினைத்தது பலிக்கும்.

10. பசுவின் தாகம் தீர்த்தவருக்குப்
பாக்கியலட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

11. பாவமில்லா உணவூட்டிப் பக்குவமாய்
பசு வளர்ப்போம்.

12. பசுவின் கால் தூசிபடல்
பாவந்தீர்க்கும் மாருதஸ்நானமாம்.

13. கோயிற்பிரசாதத் திருநீறணிதல்
குற்றம் தீர்க்கும் பார்த்திபஸ்நானமாம்.

14. பசு காத்தவருக்குப் பரகதி கிடைக்கும்.
பசுவை ஒறுத்தவர் பாழ் நரகடைவர்.

15. பசுவுக்கு உணவு கொடுத்திடுவோம்.
பாவமகன்றிட இன்புறுவோம்.

16. பசுவினை உண்போர் பாழ்பட்ட பாவிகள்.
பசுவினைக் காப்போர் பார்புகழ் தேவர்கள்.

17. பட்டிப் பொங்கல் பொங்கும் தமிழர்
பட்டிமாட்டைத் தின்னலாமா.

18. பாலைக் குடிக்கும் வாயாலே
பால் தந்த பசுவைத் தின்னலாமா.

19. பசுவைப் பட்டினி கிடக்கவிட்டவன்
பாழ்நரகில் வீழ் பாவியாவான்.

20. பசுக்கொலையின் கொடுமையினைப்
பாரெங்கும் எடுத்துரைப்போம்.

21. பசுக்கொலைக்கஞ்சிப் பரதேசம் போன
ஞானப்பிரகாசரை நாம் தொழுதுய்வோம்.

உ
சிவமயம்

# திருக்கடவூர் மயானப் பதிகம்

***பசுவின் குலமாகிய இடபத்தைச் சிவபெருமான் வாகனமாகக் கொண்டு எழுந்தருள்வார் என்பதை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பட்ட பதிகம்.***

**பண் - காந்தாரம்** திருச்சிற்றம்பலம்

வரியமறையார் பிறையார் மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்க ளெய்தா ரெறியுமுசல முடையார்
கரியமிடறு முடையார் கடவூர்மயான மமர்ந்தார்
**பெரியவிடைமேல்** வருவா ரவரெம்பெருமா னடிகளே. 01.

மங்கைமணந்த மார்பர் மழுவாள்வலனொன் றேந்திக்
கங்கைசடையிற் கரந்தார் கடவூர்மயான மமர்ந்தார்
செங்கண்**வெள்ளே றேறிச்** செல்வஞ்செய்யா வருவார்
அங்கையேறிய மறியா ரவரெம் பெரமா னடிகளே. 02.

**ஈடலிடப மிசைய ஏறி**மழுவொன் றேந்திக்
காடாதிடமா வுடையார் கடவூர்மயான மமர்ந்தார்
பாடலிசைகொள் கருவி படுதம்பலவும் பயில்வார்
ஆடலரவ முடையா ரவரெம்பெருமா னடிகளே. 03.

இறைநின்றிலங்கு வளையா ளிளையாளொருபா லுடையார்
மறைநின்றிலங்கு மொழியார் மலையார்மனத்தின் மிசையார்
கறைநின்றிலங்கு பொழில்சூழ் கடவூர்மயான மமர்ந்தார்
பிறைநின்றிலங்கு சடையா ரவரெம்பெருமா னடிகளே. 04.

**வெள்ளையெருத்தின்** மிசையார் விரிதோடொருகா திலங்கத்
துள்ளுமிளமான் மறியார் சுடர்பொற்சடைகள் துலங்கக்
கள்ளநகுவெண் டலையார் கடவூர்மயான மமர்ந்தார்
பிள்ளைமதிய முடையா ரவரெம்பெருமா னடிகளே. 05.

பொன்றாதுதிரு மணங்கொள் புனைபூங்கொன்றை புனைந்தார்
ஒன்றா**வெள்ளே றுயர்த்த** துடையாரதுவே யூர்வார்
**கன்றாவினஞ்சூழ்** புறவிற் கடவூர்மயான மமர்ந்தார்
பின்றாழ்சடையா ரொருவ ரவரெம்பெருமா னடிகளே. 06.

பாசமான களைவார் பரிவார்க்கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பா ரலங்கல்**விடைமேல்** வருவார்
காசைமலர்போல் மிடற்றார் கடவூர்மயான மமர்ந்தார்
பேசவருவா ரொருவ ரவரெம்பெருமா னடிகளே. 07.

செற்றஅரக்க னலறத் திகழ்சேவடிமெல் விரலாற்
கற்குன்றடர்த்த பெருமான் கடவூர்மயான மமர்ந்தார்
மற்றொன்றிணையில் வலிய மாசில்வெள்ளி மலைபோல்
**பெற்றொன்றேறி** வருவா ரவரெம்பெருமா னடிகளே. 08.

வருமாகரியி னுரியார் வளர்புன்சடையார் **விடையார்**
கருமானுரிதோ லுடையார் கடவூர்மயான மமர்ந்தார்
திருமாலொடுநான் முகனுந் தேர்ந்துங்காண முன்னொண்ணா
பெருமானெனவும் வருவா ரவரெம்பெருமா னடிகளே. 09.

தூய**விடைமேல்** வருவார் துன்னாருடைய மதில்கள்
காயவேவச் செற்றார் கடவூர்மயான மமர்ந்தார்
தீயகருமஞ் சொல்லுஞ் சிறுபுன்தேர தமணர்
பேய்பேயென்ன வருவா ரவரெம்பெருமா னடிகளே. 10.

மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னுமயான மமர்ந்த
அரவ மசைத்த பெருமா னகலறிய லாகப்
பரவுமறையே பயிலும் பந்தன்செஞ்சொல் மாலை
இரவும்பகலும் பரவி நினைவார்வினைக ளிலரே. 11.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம்

பதிவு இல : HA/4/JA/225 — 21-12-2002

## நிர்வாகசபை

கௌரவ தலைவர்கள்:

***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்***
*(குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்)*

***ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள்***
*(குருபீடாதிபதி சிவகுருநாத குருபீடம், வேதாந்தமடம், யாழ்ப்பாணம்)*

***பிரம்மஸ்ரீ தி. மகேஸ்வரக்குருக்கள்,***
*(இந்துமத குருபீடாதிபதி, சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)*

***சிவஸ்ரீ க. மகாலிங்கசிவக்குருக்கள்***
*(இலங்கை சைவ அர்ச்சகர் பேரவை, யாழ்ப்பாணம்)*

தலைவர் (நிர்வாகம்)

***கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்***
*(அகில இலங்கைச் சைவப்புலவர்கள் சங்கச் செயலாளர்)*

உபதலைவர்

***சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்***
*(சைவபரிபாலனசபை பரீட்சைச் செயலர்)*

இணைச் செயலாளர்கள்

***தர்மதீபம் சிவத்திரு ப. சிவலோகநாதன் அவர்கள்***
*(இந்துமாமன்றம், இந்துப்பேரவை)*

***காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்கள்***
*(அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம்)*

உப செயலாளர்

***சிவதர்ம வள்ளல் சி. சச்சிதானந்தஐயர்***
*(கோகுலம் அறநெறிப் பாடசாலை)*

பொருளாளர்

*சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் கந்த. சத்தியதாசன்*
*(இலங்கைச் சைவப்புலவர் சங்கம்)*

அமைப்பாளர்

**கோகுலப்புரவலர் கு. கங்கைவேணியன் அவர்கள்**
*(சத்திரத்து ஞான வைரவர் ஆலயம்)*

நிர்வாகசபை உறுப்பினர்கள்

**சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்**
*(சைவப்புலவர் சங்கம்)*

**பிரம்மஸ்ரீ க. சந்திரசேகரசர்மா அவர்கள்**
*(சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)*

**சைவப்புலவர் கா. கமலநாதன் அவர்கள்**
*(சைவபரிபாலன சபை)*

**திரு க. பரணீதரன் அவர்கள்**
*(பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்)*

**திரு சோ. பரமசாமி அவர்கள்**
*(பரமாநந்தவல்லி ஆச்சிரமம்)*

**சைவப்புலவர் நித்திய தசீதரன் அவர்கள்**
*(மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு)*

**சமூகமணி இ. தவகோபால் அவர்கள்**
*(யாழ் மாவட்ட சிறுவர் பாடசாலை ஒன்றியம்)*

**Dr. இ. சற்குருநாதன் அவர்கள்**
*(யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை)*

**சிவஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் அவர்கள்**
*(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)*

**சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள் அவர்கள்**
*(சோலையம்மன் கோவில், சாவகச்சேரி)*

**பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்**
*(அகில இலங்கைத் திருமுறை மன்றம்)*

**சு. செல்லத்துரை**
தலைவர்

**ப. சிவலோகநாதன்**
செயலாளர்

உ
சிவமயம்

# பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் நோக்கங்கள்

1. நம் நாட்டின் போசாக்குத் தேவையை நாமே நிறைவு செய்துகொள்ளல். அதற்காக பசு, இடபங்களைக் கொல்லாது தடுத்தல்.
2. பௌத்த, இந்து மதக் கொள்கைகளின்படி உயிர்களைக் கொல்லாது தடுத்தலில் ஒருகட்டமாக பசுவைப் பேணல்.
3. இந்து தத்துவத்தின்படி பசுவில் பலதெய்வங்களும், தேவர்களும் வசித்து வருவதால் பசுவின் தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர்தல்.
4. நிறையுணவான பாலை எல்லோரும் மலிவாகப் பெறச் செய்தல்.
5. பாலுணவுகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதைக் குறைத்தல்.
6. இயற்கைப் பசளையான எருவின் விளைவை அதிகரித்துச் செயற்கைப் பசளைகளால் சூழல் மாசடைவதைத் தடுத்தல்.
7. எருதுகளைப் பயன்படுத்தி வேலை செய்வதால் இயந்திரப் பாவனையைக் குறைத்து சூழல் மாசடைவதைத் தடுத்தல்.
8. பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கு ஊர்கள்தோறும் சரணாலயங்கள் அமைத்துக் கொள்ளல்.
9. புலாலுணவுகளால் வரும் கேட்டினையும், நோய்களையும் மாணவர்கள் மத்தியில் பிரசாரம் செய்தலும், கொல்லாமையின் பெருமை, பசுவின் பெருமை, மேற்கூறிய விடயங்களின் விளக்கங்களை மாணவர்கள். ஆசிரியர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்குதல்.

**சு. செல்லத்துரை**
தலைவர்

**ப. சிவலோகநாதன்**
செயலாளர்

உ

சிவமயம்

### கோமாதாவே துணை!

# பசுவதை செய்யாதீர்கள்

✶ குலமாதாவாக விளங்குவது பசு.

✶ பசுவின் நான்கு கால்களும் நான்கு வேதங்களாகக் கொள்ளப்படுகிறது.

✶ முப்பத்து முக்கோடி தேவர்கள் வாசம் செய்யும் மேனியைத் தாங்குவது. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், இலக்குமி, சூரியன், சந்திரன் போன்ற தெய்வங்கள் வாசம் செய்கின்ற புனித மேனியைத் தாங்கிய வண்ணம் உள்ளது.

✶ ஆலய கும்பாபிஷேகங்கள், திருமண விழாக்கள் போன்ற விசேட தினங்களில் முதன்முதலாக இக்கோமாதாவின் தரிசனம் பெற்றுத்தான் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றது.

✶ பசு தான் ஈன்ற கன்றுக்கு மட்டும் தாய் அல்ல. மானிடர் யாவருக்கும் தாய். பால் - தயிர் - நெய் போன்ற நல்ல சத்துணவுகளை எம்மக்களுக்குத் தருகின்றது.

✶ தாவரங்களுக்கு நல்ல பசளையாகச் சாணம் இடுகின்றது.

✶ ஆலயங்களிலும் நமது இல்லங்களிலும் பூஜைகளில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது பசு.

✶ பசுவதை தவிர்ப்பால் தேவர் குலம் மட்டுமல்ல, மனித குலமும் தழைக்க வழிவகுக்கும் என்பது பற்றி ஆதி வேதத்தில் கூறப்படுகிறது. இவற்றை வதைத்து உண்ணலாமா? எல்லோரும் சிந்தித்திடுவீர்! செயற்படுவீர்.

*வெளியீடு*

*✻ சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்*

*✻ பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழு*

*✻ வடபிராந்திய இந்துப் பேரவை*

உ
சிவமயம்

# எங்கள் கோகுல சாலையில் உங்கள் முதிய மாடுகளைக் காப்போம்

**பசுக்குலம் வளர்க்கும் புண்ணிய சீலர்களே!**

நீங்கள் வளர்த்த பசு அல்லது எருது முதுமை யடைந்து வருமானம் தரமுடியாத முதிய மாடாகிவிட்டதா?

வருமானம் இல்லாத மாட்டை வளர்ப்பது உங்களுக்குச் சிரமம்தானே. அதை என்ன செய்யப் போகின்றீர்கள்?

இவ்வளவு காலமும் உங்களுக்காக உழைத்த அந்த மாட்டை இறைச்சிக்கு விற்காதீர்கள், அது பாவமான கொடிய செயல்.

உங்களால் வளர்க்க முடியாத மாடுகளை எங்களிடம் தாருங்கள். நாங்கள் விலை தந்து வாங்கி எங்கள் கோகுல சாலையில் வைத்துப் பாதுகாத்து அவற்றை இறுதிவரை காப்போம்.

**நீங்கள் எங்களில் ஒருவருடன் தொடர்பு கொள்ளுங்கள்**

| | | |
|---|---|---|
| *சைவப்புலவர்* | *தர்மதீபம்* | *கோகுலப்புரவலர்* |
| ***சு. செல்லத்துரை*** | ***ப. சிவலோகநாதன்*** | ***கு. கங்கைவேணியன்*** |
| இளவாலை | அராலி | 165, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| **T.P-0777063392** | **070-212944** | **021-2222661** |
| தலைவர் | செயலாளர் | அமைப்பாளர் |

**பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான இணையம்**

உ
சிவமயம்

# நன்றி சொல்லிப் பாராட்டுகின்றோம்

கோமாதா குலம் காக்கும் பணியில் முன்னின்றுழைக்கும் அனைவரையும் பணிந்து நன்றி பாராட்டிப் போற்றுகின்றோம்.
சிறப்பாக,

- யாழ் நகரில் மக்கள் பார்வைக்குரிய பிரதான இடங்களில் **பசுவதை ஒழிப்போம்** எனத் தலைப்பிட்டு கோமாதா படம் வரைந்து பொன்மொழிகள் பொறித்துப், பசுக்குலத்தின் பெருமையைப் பிரசாரப்படுத்தும் வள்ளல்களே!
- கலண்டர்களில் பசுவின்படம் பதித்து பொன்மொழிகள் பொறித்து வழங்கும் வர்த்தகப் பெருமக்களே!
- **கோமாதாகுலம் காப்போம்** எனும் விதவிதமான "ஸ்ரிக்கர்கள்" பொன்மொழிகள் அச்சிட்டு வழங்கும் அன்பர்களே!
- **கோமாதா குலத்தைக் கொல்லாதீர்** எனத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு வழங்கும் பெரியோர்களே!
- பசுவின் பெருமைபற்றி அவ்வப்போது கட்டுரைகள், கவிதைகள், கதைகள், செய்திகள் எழுதும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களே! அவற்றை வெளியிடும் ஊடகவியலாளர்களே!
- பசுக்குலத்தின் பெருமைபற்றிய **கோமாதா, பசுவின் புலம்பல், பசுவுக்குத் தொண்டு செய்வதன் வியத்தகு விளைவுகள்** முதலான நூல்களின் ஆசிரியர்களே! வெளியீட்டாளர்களே!
- பட்டிப் பொங்கலன்று பசுக்குலத்துக்கு விழாவெடுத்து நன்றி பாராட்டும் நிறுவனங்களின் நிர்வாகிகளே!
- பசுவின் பெருமை கூறும் நூல்களை இறந்தவர்களின் நினைவு நூல்களாக வெளியிடும் உத்தமர்களே!
- கோபூசை செய்யும் சைவாலய அறங்காவலர்களே! சிவாச்சாரியார்களே!
- சைவ சமயப் பிரசங்கங்களிலெல்லாம் பசுவின் பெருமை பற்றிப் பேசிப் பிரசாரம் செய்யும் சொற்பொழிவாளர்களே!

நீங்கள் பசுபுண்ணியம் செய்யும் புண்ணியவான்கள். உங்கள் பசு புண்ணியம் சிவபுண்ணியமாகவே மலரும். உங்களை வணங்கிப் போற்றுகின்றோம்.

நன்றி

*பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான*
*சகல சமய நிறுவனங்களின் இணையம்.*

உ
சிவமயம்

# அன்னை சொல் – தன்கதை

சைவப்புலவர் சு. செல்லத்துரை

இன்றைக்கென் உடல்செத்து முப்பத்தொன்றானது
இன்றுடன் நான்பிதிர் உலகிற்குச் செல்கிறேன்
இந்நேரம் நான்வந்த வழிதிரும்பிப் பார்க்கின்றேன்.
என்கதை சொல்கிறேன் - இறுதியாய்க் கேளுங்கள்.

**பிறந்தேன்:**

வளமான வாழ்வுதரும் இளவாலை ஊரினிலே
இளையகுட்டி நாச்சன்எனும் என்பெற்றார் எனைப்பெறவே
பத்து வருடங்கள் பாடுபட்டுத் தவமிருந்தார்
பத்தினிப் பிள்ளையெனப் பெயரிட்டுச் செல்லமாய்
மெத்தக் கரிசனையாய் வளர்த்துமணம் செய்துவைத்தார்.

**மணந்தேன்:**

மாவிட்டபுரம் தந்த மன்னவராம் என்கணவர்
மாவைமுருகன் மனமகலாச் சுப்பிரமணியம்
கால்பட்ட இடத்துப் புல்லுக்கும் நோவாத
பொறுமைத் திருவுருவம் புண்ணியவான்
பதினாறு வருடத்தில் இல்லறத்தை முடித்து விட்டுப்
பதிலுக்கு நாலு குஞ்சைப் பக்கத்திருத்திவிட்டு
ஐம்பதாம் ஆண்டினிலே அரைவயதில் போய்விட்டார்
அதற்கு முதல் அப்புவும் தம்பியும் போய்விட்டார்.

**பிள்ளைகளை வளர்த்தேன்:**

ஆண்துணை இல்லாமல் அவர் பெருமை துணையாக
ஆச்சியும் நானும் அருமைக் குழந்தைகளும்
விதியையே நம்பிமன உறுதிதளராத வகையில்
வட்டன் வயல்தனிலும் பண்டவனைத் தோட்டத்தும்
பட்டை துலாவுடனே பகலிரவாய்ப் பாடுபட்டு
பயிர்வளர்த்தும் பசுவளர்த்தும் பிறரிடம்கை நீட்டாமல்
பிள்ளைகளை வளர்த்துப் பிரியமாய்ப் படிக்கவைத்து
ஒவ்வொருவராக உத்தியோகம் கிடைக்கவுமே
தலைநிமிர்ந்தோம் எங்கள் தளரா முயற்சியினால்.

**குலம் தழைக்க குதூகலித்தேன்:**

மக்களுக்கு வந்த மருமக்கள் நால்வருமே
தக்கபெருந் தூண்களாய்த் தலைநிமிர்ந்து நின்றார்கள்

உலகம் மதித்திடவும் உத்தமர்கள் போற்றிடவும்
ஒற்றுமையாய் என்குடும்பம் உயர்வடைய வைத்தார்கள்
மருமக்களும் எனக்கு மக்கள்போல் துணையானார்
பதினாலு பேர்பேரர் பத்துப்பேர் பூட்டர்களும்
அதிபர் ஆசிரியர்கள் விதானை லிகிதர்முதல்
கணக்காளர் தொழில்நுட்ப வல்லுநர்கள் கவிஞர்களாய்
உலகின் பலதிசையும் உயர்ந்த புகழ்பரப்ப
எதிலும் குறைச்சலின்றி இல்லையென்ற சொல்லின்றி
பிள்ளைகளால் பெருமை பெற்றேன் பெருமானைப் போற்றிநின்றேன்

**குடிபெயர்ந்து உலாவந்தேன்:**

வரலாறறியாத காலமுதல் வாழ்ந்தமண்ணை
இரவோடிரவாக இராணுவத்திற் கிரையாக்கி
இளவாலை விட்டோடி இணுவிலிலே குடியேறி
அழகான மிருசுவிலும் மாங்குளமும் வவுனியா
திருமலையும் சென்றிருந்து தீராததவிப்புடனே
என்சொந்த மண்ணில்தான் என்னிறுதி மூச்சு நிற்கும்
என் அருமை மகன்கையால் என்இறுதிக் கடன் பெறுவேன்
என்றசபதத்தை எந்நாளும் சொன்னபடி
ஐஞ்சு வருடங்கள் அஞ்ஞாதவாசம் போய்
சொந்த மண்ணில் மீண்டுவந்து சுகமாகவே வாழ்ந்தேன்.

**பெருமை மிகப் பெற்றேன்:**

ஊரெல்லாம் கூடியோர் பெருவிழா எடுத்தார்கள்
என்மகனுக்குயர் மணிவிழா வென்றனர்
எனக்கது நிகரிலா அணிவிழாவானது
ஆயிரம் பிறைகண்ட அன்னையே என்றவர்
மாலைகள் சூட்டியும் மதிப்புடன் போற்றியும்
தக்கவர் பெரியவர் சான்றோர் வணங்கினர்
பிள்ளையால் வந்திட்ட பெருமையைப் பாரென்று
ஒளிப்படம் எடுத்தென்னை உலாவரக் காட்டிடக்
கண்டு களித்திட்ட காட்சியை நினைக்கின்றேன்.

**நோய் கண்டேன்:**

நோய் கண்டதெனக்கென்ற நொடியிலே வந்தூமே
தாய்மடிப் பிள்ளைபோல் தத்தம் மடிகளில்
நால்வர் என்மக்களும் நன்மருமக்களும்
பேரரும் வந்தெனைப் பிள்ளைபோல் செல்லமாய்

பதின்மூன்று நாட்களாய் பக்குவம் பண்ணிடப்
புண்ணியம் என்னசெய்தேனெனத் திகைக்கின்றேன்.

**உடலைப் பிரிந்தேன்:**

என்னுயிர் உடல்விட்டுப் பிரிகின்ற வேளையில்
என்மக்கள் மருமக்கள் என்பேரர் பூட்டர்கள்
அன்பான சுற்றத்தார் அயலவர்கள் எல்லோரும்
திருமுறைகள் பாடிச் சிவநாமங்கள் சொல்லித்
திருவருள் துணையோடு சிவகதி செல்லென்று
பாடிப் பரவிப் பரவசமாய் நின்றீர்கள்.

**உயிராய் நின்றேன்:**

உடலை உதறிவிட்டு உருவில்லா உயிராய்நான்
உங்களுடனே தான் இந்நாள் வரையிருந்தேன்
உற்றார் உறவினர்கள் ஊரார் உவப்பானோர்
கற்றோர் கனவான்கள் கணக்கில்லார் கூடிநின்று
சைவக் குருவந்து தகுந்தகிரியை செய்ய
அபிஷேகம் செய்துடலை அலங்கரித்து பட்டுடுத்தி
மாலை மலர்வளையம் மங்கலதீபங்களுடன்
பண்ணிசைத்துப் பூசை செய்து பாராட்டி அஞ்சலித்து
கண்ணீர் மலர் சொரிந்து கதறியழு தெல்லோரும்
மங்கல தீபங்காட்டி மலரிட்டுக் கும்பிட்டுப்
பூந்தண்டிகை வைத்துப் பிள்ளைகள் அணிவகுத்து
போகவிடை தந்தீர்கள் ஊர்கோலமாய்ப் போன
புண்ணியத்தை எண்ணிப் பூரித்துப் போனேன் நான்.

**விடைபெற்றேன் வாழ்ந்திருங்கள்:**

முப்பத்தொரு நாளும் முறையாக ஆதரித்து
இன்றெனக்குக் கீரிமலை சென்றந்தியேட்டி செய்து
என்வினைகள் யாவையுமே எரித்துக் கடலிலிட்டு
வீட்டுக் கிருத்தியமும் விரும்பும்படி செய்து
புண்ணியத்தின் துணையோடு போகவழி செய்தீர்கள்
என்பிறப்பின் பயன்பெற்றேன் இனிக்கவலை ஏதுமில்லை
என்முன்னோர் பிதிருடன் நான்செல்வேன் வாழ்ந்திருங்கள்
என்றென்றும் என்குலத்துக் கென் ஆசி தந்திடுவேன்.

**திதி**

வெகுதா னியமாசி வேண்டு மபரத்து
மிகுதுதியை மேன்மையுற மேலாம் - தகுதினமே
ஏத்துமிள வாலையெமக் கீபத் தினிப்பிள்ளை
கூத்தனடி கூடினளாங் கொள்.

# கோமாதா நல்கும் குஷி

ஏய் புலமை ஈன்றளித்த தாய்புலமை யாக்கிக்காண்
சேய் புலமை ஊற்றத் திறனன்றோ - சேயகதிப்
போமாதா வின்வாய்ப் புதுக்கவிதை யாலெமக்குக்
கோமாதா நல்கும் குஷி

பொருள் ஏய் புலமை - தானாகவே வந்து வாய்க்கும் புலமையை; ஈன்றளித்த தாய்புலமையாக்கி - பெற்றெடுத்த தாயின் புலமையாகப்பண்ணி; காண்சேய் - காண்கின்ற மகனினது; புலமை ஊற்றத் திறனன்றோ - புலமை ஊற்றத்தினது திறமை அல்லவோ; சேயகதிப்போமாதா வின்வாய்ப் புதுக்கவிதையால் - தூராதூரக் கதியை நாடிப்போகின்ற மாதாவின் வாயில் இட்டு உரைக்கும் புதுமைக்கவிதை மூலமாக; எமக்குக் கோமாதா நல்கும் குஷி - எமக்குக் கோமாதா என்னும் நூல் தரும் குதூகலம்.

பேய்த்திறமை பேடிகை வாட்டிறமை ஆய்த்தன்றோ
தாய்த்திறமை பாடாத் தமிழ்த்திறமை - பூத்தபுகழ்
செல்லத் துரையனைவாய்த் தீட்டும் கவித்திறமை
எல்லை தெரிந்திட்ட பின்

பொருள் - பூத்தபுகழ் செல்லத்துரையனை வாய்த் தீட்டும் கவித்திறமை - புகழ்பூத்த செல்லத்துரை. அன்னையின் வாய் மூலம் ஆக்கிய கவித்திறமையின்; எல்லை தெரிந்திட்டபின் - சிறப்பின் எல்லையைக் கண்டபின்; தாய்த்திறமை பாடாத் தமிழ்த்திறமை - தாயின் திறமையைப் பாடாத தமிழ்த் திறமை; பேய்த்திறமை- பேய்த்தனமான திறமை; பேடிகை வாட்டிறமை ஆய்த்தன்றோ - பேடியின் கையில் கிடைத்த வாளின் திறமை போன்ற தன்றோ. (பயன்ற்றது)



இலக்கியகலாநிதி பண்டிதமணி
மு.கந்தையா
"சத்திமுற்றம்"
ஏழாலை